Approved by the Text-Book Committee Madras.

SINDBAD THE SAILOR

(TAMIL)

4187

BY

C. R. GOVINDARAJA MUDALIAR

Head Tamil Pandit,

Pachaiyappa's College School, Madras.

4187

K. PALANIANDI PILLAI & CO.

EDUCATIONAL PUBLISHERS

MADRAS.

ந-140.
பாகனேரி
V. PR. PL. M.K.
Paganeri
4187

சிந்துபாத்து நாவிகன்

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர் கலாசாலை,
சென்னை.

V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

நகரவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
சென்னை.

பதிப்புரிமை] 1935 [விலை அணா 6.

திருவள்ளுவர் நூல் நிலையம்

Approved by the Text-Book Committee,

Vide Fort St. George Gazette, Page 178,

Dated 4th April, 1933.

4187

PRESENTED BY:
V. PR: PL: KR:
KASIVISVANATHAN CHETTIAR,
PAGANERI:

முகவுரை

இரவிற் சொல்லிய அரபிக் கதைகள் (Arabian Nights) சொற்சுவையும், பொருட்சுவையும், கதை நயமும் பொருந்தப் பெற்றுக் கற்போர் உள்ளத்தைக் கவர்வனவாகும். சிந்துபாத்து நாவிகன் (Sindbad the Sailor) கதை அவற்றுள் ஒன்று. இது, பல இனிய நீதிகளைப் புகட்டக் கூடியது. சிந்துபாத்து நாவிகன் செய்த ஏழு கடற் பிரயாணங்களில், அவன் அனுபவித்த இன்னல்களும் அவனுக்கு நேரிட்ட பயங்கர நிகழ்ச்சிகளும் கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாகும்.

இக்கதை மாணவ மாணவிகட்கேற்ற இனிய எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதால், இதனை அறிஞர்கள், மாணவர்கள் மாணவிகளுக்குப் பயன்படும்படி செய்வார்கள் என நம்புகின்றேன்.

அன்பன்,

கா. ர. கோ.

உள்ளுறை

பொருள்			பக்கம்
1.	கதையின் வரலாறு	...	5
2.	முதலாங் கப்பல் யாத்திரை	...	11
3.	இரண்டாங் கப்பல் யாத்திரை	...	22
4.	மூன்றுங் கப்பல் யாத்திரை	...	34
5.	நான்காங் கப்பல் யாத்திரை	...	51
6.	ஐந்தாங் கப்பல் யாத்திரை	...	67
7.	ஆறுங் கப்பல் யாத்திரை	...	78
8.	கடைசிக் கப்பல் யாத்திரை	...	93

ஸ்ரீ:

சிந்துபாத்து நாவிகன்

வஞ்சித் துறை

நலமலி வெண்பூக்
குலவுறு வாடன்
போலன்மல ரடியின்
நலனினை மனமே.

கதையின் வரலாறு

முன்னொரு காலத்தில் பாக்தாத்து என்னும் பட்டணத்தில் சிந்துபாத்து என்னும் ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் அரசர்களும் விரும்பத்தக்கபெருஞ் செல்வமுடையவன். ஆயினும், அவன் செல்வத்தினால் செருக்கடையாமல் ஏழைகளையும், சுற்றத்தவர்களையும், நண்பர்களையும் ஆதரித்து வந்தான்; ஏழைகளைக் கண்டால் மனம் இரங்கி, இனிய சொற்களைச் சொல்லி, அவர்களுக்கு வறுமை நீங்கப் பொருளை வழங்குவான். அவன் உண்ணும்போது விருந்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள் முதலியவர்களோடு கூடியே உண்பான். அவனுடைய செல்வப்பெருக்கினாலும், நற்குணங்களினாலும் அவன் பெயர் எங்கும் பரவி விளங்கியது. அவன் பல முறை கப்பல் யாத்திரை செய்தானாகையால்,

அவனை யாவரும் சிந்துபாத்து நாவிகன் என்று கூற லாயினர்.

அப்பட்டணத்தில் இந்துபாத்து என்னும் ஓர் எளியவன் இருந்தான். அவன் கூலிக்குச் சுமைகளைச் சுமந்து பிழைப்பவன். அவன் ஒரு நாள் பகலில் ஒரு பெருஞ்சுமையைச் சுமந்துகொண்டு, அச்சுமைக்குரியவனாகிய வர்த்தகனுடைய கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவ்வாறு சென்றுகொண்டிருந்தவன் தான்என்றும் பார்த்தறியா ஒரு பெரிய தெருவின் வழியே சென்றான். அப்போது அவனுக்குச் சுமையின் பாரமிகுதியினாலும், வெய்யிலின் கொடுமையினாலும் மிக்க களைப்பு உண்டாயிற்று. அதனால், அவன் அத் தெருவில் உள்ள ஒரு பெரிய வீட்டின் அருகில் அச் சுமையை இறக்கிவிட்டு உட்கார்ந்தான். அத்தெருவில் நன்றாய் நீர் தெளிக்கப்பட்டிருந்தது. அவ்வீட்டில் வெளிப்புறமெல்லாம் பூந்தொட்டிகளில் பல வகையான பூஞ்செடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆதலின், அங்கு மெல்லெனக் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அக்காற்று அவன்மேற் பட்டதனால், அவனுடைய களைப்புச் சிறிது நீங்கியது.

அக்கூலிக்காரன், 'ஆ! நான் இத்தெரு வழியாக வராமல் வேறொரு தெரு வழியாகச் சென்றிருப்பேனானால் என்னுடைய களைப்பு மிகுந்திருக்குமேயல்லாமல் குறைந்திராது,' என்று தனக்குள் சொல்லிக்கொண்டிருந்தான். அப்போது அவ்வீட்டினின்று சந்தனம், அகிற்கட்டை, பனிநீர் முதலியவற்றின் வாசனையும், இனிய சுவையுள்ள தின்பண்டங்களின் வாசனையும்

வந்து அவன் மனத்தைக் கவர்ந்தன. பல வகையாகிய இனிய இசைக்கருவிகளின் ஒலி அவனை மகிழ்வித்தது. 'ஆ! இந்த இடம் எவ்வளவு இன்பத்தைத் தருகின்றது! நான் இப்பட்டணத்தில் வசிப்பவனுயிருந்தும், இவ்வளவு சிறப்பினையுடைய இந்தத் தெருவுக்கு இதுவரையிலும் வந்திலேன்; ஏதோ நல்ல காலமாகத்தான் இன்று இத்தெரு வழியாக வந்தேன். இவ்வீட்டுக்குடையவன் செல்வமே செல்வம்! அவனை இன்னுன் என்று நான் அறிந்துகொள்ள வேண்டும்,' என்று எண்ணினன். அவ்வீட்டின் வாயிலில் சிறந்த ஆடை அணிந்த சில வாயிற் காவலர்கள் நின்றிருந்தார்கள். அக்கூலிக்காரன் அவர்களில் ஒருவனிடஞ் சென்று, 'ஐய, இவ்வீட்டிற்குரியவர் யார்?' என்றுகேட்டான். அக்காவலன், 'நீ வசிக்கும் ஊர் யாது?' என்றுன். அக்கூலிக்காரன், 'ஐய, இப்பட்டணமே நான் வசிக்கும் இடம்,' என்றுன். காவலன், 'ஆ! என்ன வியப்பு! நீ இப்பட்டணத்தில் இருந்தும் இதுவரையிலும் இது சிக்கனுர் - சிந்துபாத்து நாவிகரது வீடு என்பதை அறியாயா! அவரை அறியாதவர்களும் இப்பட்டணத்தில் உண்டோ! அவர் பெயர் உலகமுழுதும் பரவி இருக்கின்றதே!' என்றுன். இந்துபாத்து, 'ஐய, நான் இதுவரையிலும் இத்தெருவில் வந்ததேயில்லை; வயிற்றுப் பிழைப்புக்கு எங்குக் கூலி கிடைக்கும் என ஏங்கித் திரிகின்றவன்; ஆகையால், இப்பெருஞ்செல்வரை நான் இதுகாறும் அறிந்துகொள்ளவில்லை,' என்று கூறித் தான் முன் இருந்த இடத்துக்குச் சென்று, 'ஓ! கடவுளே, நீ எல்லா உயிர்களையும் சமமாகக் கொண்டு

காப்பவனல்லேயோ? உனக்கு வேண்டாதவர்கள் என்பவர்களும் வேண்டியவர்கள் என்பவர்களும் இல்லையல்லவா? அப்படியிருக்க, இச்சிந்துபாத்து, வேந்தர்களும் விரும்பும் பெருஞ்செல்வமுடையவனாய் எல்லாச் சுகங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கவும், என்னைநாள் தோறும் பெருஞ்சுமைகளைச் சுமந்து அரை வயிற்றுக் கஞ்சிக்கும் போதாத கூலியைப் பெற்று வாடி வருந்தும்படி வைத்ததற்குக் காரணம் யாது? இது நடு நிலைமையும் பேரருளும் உடைய உனக்கு ஏற்ற செயலாகுமோ?' என்று கடவுளை நோக்கிக் கூறினான்.

அப்போது ஒருவன் அவனிடம் வந்து, 'ஐய,* எங்கள் எஜமானராகிய சிக்கனார் - சிந்துபாத்து நாவிகர் உம்மை அழைத்துவரச் சொன்னார்,' என்றான். இந்துபாத்து அதனைக் கேட்டு, 'ஐயோ! நான் வறுமையின் கொடுமையினால் சிறிதும் முன்பின் யோசியாமல் இப்படிக் கூறிவிட்டேனே! இப்பிரபு அதற்காக எனக்கு யாது தண்டனை விதிப்பானோ! தெரியவில்லையே!' என்று நடுங்கிக்கொண்டே அம்மனிதனுடன் சிந்துபாத்து இருக்கும் இடத்திற்குச் சென்றான். சிந்துபாத்து ஏழ்மை மிகுந்தவனாகிய இந்துபாத்தைக் கண்டவுடன் எதிர்கொண்டழைத்துத் தன் அருகில் உட்கார வைத்துக்கொண்டு, இனிய மொழிகளைக் கூறி அவனை உபசரித்தான். அதனால், இந்துபாத்தின் அச்சம் நீங்கியது. பின்பு சிந்துபாத்து, இந்துபாத்தோடும், மற்ற விருந்தினரோடும் இருந்து உண்டான்.

---

*ஐய......உம்மை-இஃது உலக வழக்கிற் பயின்று வருவதொரு வழுவமைதி.

பின்னர்ச் சிந்துபாத்து, இந்துபாத்தை நோக்கி, 'ஐய, உம்முடைய பெயர் என்ன? நீர் செய்யுந் தொழில் யாது?' என்று கேட்டான். இந்துபாத்து, 'அன்புடையவரே, என் பெயர் இந்துபாத்து என்பது. கூலிக்குச் சுமைகளைச் சுமத்தலே என் தொழில்,' என்றான். சிந்துபாத்து, 'ஐய, கடவுள் உம்முடைய வறுமை நீங்கும்படி அருள் புரிவாராக; நீர் தெருவில் கூறியதை மற்றொரு முறை கூற வேண்டும்,' என்றான். இந்துபாத்து, 'அருளுடைய செல்வரே, வறுமை மிகுதியினால் புத்தி தடுமாறி ஏதோ தெருவில் கூறிவிட்டேன். அதனைத் தங்களுக்கு முன் சொல்ல என்னால் முடியாது. தாங்கள் கேட்டபடி நான் கூறாததற்காக என்னைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்,' என்றான். சிந்துபாத்து, 'ஐய, நீர் கொண்ட தவறான எண்ணத்தைப் போக்க எண்ணியே உம்மை மீண்டும் அதனைச் சொல்லச் சொன்னேன். கடவுள் நடுநிலைமை அற்று என்பால் அன்புகொண்டு எனக்குச்செல்வத்தை அளித்திலர். இப்பொருளைச் சம்பாதிக்க நான் அடைந்த துன்பங்களும் அளவில்லாதவைகளாகும். அவற்றைக் கேட்டால் நீரே, 'இவர் பட்ட பாட்டுக்கு முன் நாம் படும் பாடு சூரியனுக்கு முன் மின்மினி போன்றதாகும்,' என்று எண்ணுவீர். அன்பரே, நான் இப்பொருளைச் சம்பாதிக்கும் பொருட்டுப் பல முறை கப்பலேறிச் சென்று அடைந்த துன்பங்களைக் கூறுகின்றேன்; கேளும்,' என்றான். இந்துபாத்து, சிந்துபாத்தை நோக்கி, 'அருங்குணச் செல்வரே, தாம் முன்னே நான் கொண்டு வந்த சுமையை அதற்குரியவ

ரிடஞ் சேர்ப்பித்தருள வேண்டும். அப்படிச் செய் யாவிடின், அதற்குரியவர் மிகவும் வருந்துவதோடு, என்னைப் பற்றியும் தவறான கருத்துக் கொள்ளுவார் அல்லவா?' என்றான். சிந்துபாத்து அவ்விதமே தன் பணியாளர்களால் அச்சுமையை அதற்குரியவ ரிடஞ் சேர்ப்பித்துவிட்டான். பிறகு இந்துபாத்து, 'அன்புடையவரே, தாங்கள் செய்த கப்பல் யாத்திரை யின் வரலாற்றைக் கேட்க எனக்கு அவா மிகுகின்றது. அதனைக் கூறுங்கள்,' என்றான். சிந்துபாத்து இந்து பாத்தை நோக்கி, 'நண்பரே, உலகில் பழி பாவங் களுக்கு அஞ்சுகின்றவர்கள் எவ்வித நிலையில் இருந் தாலும், அவர்களுக்குக் கடவுள் அருள் வாய்க்கும். உமக்கு வறுமை மிகுந்திருப்பினும், உம்மிடம் நற் குணங்கள் பொருந்தி விளங்குகின்றன. இனிக் கடவுள் அருளால் நீர் துன்பம் நீங்கி இன்பம் அடைவீர் என்று நம்புகிறேன். என் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கூறுகின்றேன்; கேளும்: மற்றை நண்பர்களும் கேட் பார்களாக,' என்று கூறத் தொடங்கினன். இந்துபாத் தும், சிந்துபாத்தின் மற்ற நண்பர்களும் அதனை மிக்க அவாவுடன் கேட்கலானார்கள்.

முதலாங் கப்பல் யாத்திரை

“நண்பர்களே, என் தந்தையார் எனக்குப்பெருஞ் செல்வத்தை ஈட்டி வைத்துவிட்டு இறந்து போனார். நான் தீயவர்களின் சேர்க்கையினால் அப்பொருளிற் பெரும்பகுதியைச் சூதாடுதல், மதுவருந்தல் முதலிய தீய வழிகளிலே செலவிட்டுவிட்டேன். பிறகு எனக்குச் சில நல்லவர்களுடைய சேர்க்கை உண்டாயிற்று. அதனால், எனக்கு நல்லறிவு உண்டாயிற்று. பின்பு அத்தீயவர்களின் சேர்க்கையை மெல்ல மெல்ல விட்டொழித்து, எனக்குள், ‘ஐயோ! நம்முடைய தந்தையார் அரும்பாடு பட்டுத் தேடி வைத்த பொருளிற் பெரும்பகுதியை நாம் அறிவின்றித் தீயவர்களுடன் கூடித் தீய வழிகளிற் செலவழித்துவிட்டோமே! குடத்தைச் செய்வது அரிது; அதனை உடைத்து விடுதல் எளிது. பெரும்பாறையை மலையின் உச்சியில் ஏற்றுதல் அரிது; அதனை அங்கிருந்து தள்ளிவிடுதல் எளிது அல்லவா? உலகில் பொருளைச் சம்பாதித்தல் அரிது; சம்பாதித்த பொருளைச் செலவிடுதல் எளிதே. உலகில் பொருளில்லாதவனை யாவர் மதிப்பர்? பொருளில்லாதவனை மனைவி மக்களும் வெறுப்பார்கள்: பத்து மாதங்கள் வயிற்றில் வைத்துச் சுமந்து ஈன்றெடுத்து அன்புடன் வளர்த்த தாயும் வெறுப்பாள் என்றால், மற்றவர்கள் வெறுப்பது வியப்பல்லவே! இதனால் அல்லவா, ‘பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை,’ என்று பெரியோர் கூறுகின்றனர்? பொருளில்லாதவன் சிறந்த கல்வியும் அறிவும் படைத்தவனாய்

இருந்தாலும், அவன் சொல்லை உலகினர் ஏலார். உலகினர் பொருளில்லாதவனை நடைப்பிணம் என்றே கருதுவர். ஆகையால், நாம் இழந்த பொருளினும் மிக்க பொருளை ஈட்டுதல் வேண்டும். இதற்குரிய வழி யாது?' என்று எண்ணினேன்.

"பின்பு நற்குணங்கள் வாய்ந்த ஒரு பெரியவரிடஞ் சென்று, என் கருத்தை அவருக்குரைத்தேன். அதனைக் கேட்டு அவர் கூறியபடி மிச்சமாயிருந்த என் வீடுகள், நிலங்கள் முதலியவற்றை விற்று அவற்றால் வரும் பொருளை முதலாக வைத்துச் சரக்குகள் வாங்கி, 'திரைகடலோடியும் திரவியம் தேடு,' என்ற மூதுரையின்படி கப்பலேறிப் பல தீவுகளுக்குச்சென்று வர்த்தகஞ் செய்து பொருளை வளர்க்க வேண்டும் எனத் தீர்மானித்தேன்; அவ்வாறே என் வீடுகள், நிலங்கள் முதலியவற்றை விற்று அவற்றால் பெற்ற பொருளுக்கு வெளி நாடுகளில் விற்றற்குரிய சரக்குகளை வாங்கிக்கொண்டு பாரிசு தேசத்துக் குடாக்கடலின் அருகில் உள்ள துறைமுகப் பட்டினமாகிய பால்சோரா என்னும் நகருக்குச் சென்று, துறைமுகத்தை அடைந்தேன். அங்குக் கப்பல் ஒன்று தேசாந்தரங்களுக்குச் செல்லப் பாய் விரித்துச் சித்தமாயிருந்தது. அவ்விடத்தில் கப்பல்களில் ஏறி வெளி நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்யும் வர்த்தகர் பலர் எனக்கு முன்னாக வந்திருந்தனர். நானும் அவர்களும் சரக்குகளுடன் அக்கப்பலில் ஏறினோம்.

"மாலுமி கீழ்த்திசையாகக் கப்பலைச் செலுத்தினான். அது எனக்கு முதல் யாத்திரை ஆகையால், மயக்

கம் வாந்தி முதலியவற்றால் மிக்க துன்பம் உண்டா யிற்று. ஆனால், அந்நோய்கள் விரைவில் நீங்கிவிட்டன. நாங்கள் பல தீவுகளுக்குச் சென்று சில சரக்குகளை விற்றோம்; சில சரக்குகளை அந்த அந்தத் தீவுகளில் உள்ள வேறு சரக்குகளுக்குப் பதிலாக மாற்றிக் கொண்டோம்.

"இவ்வாறு நாங்கள் பல தீவுகளில் வியாபாரம் செய்துகொண்டு யாத்திரை செய்கையில், கடலில் ஓரிடத்திலே ஒரு தீவு போன்ற வடிவங் காணப்பட்டது. கப்பல் தலைவன் அதனைக் கண்டு கப்பலை நிறுத்தி, 'இத்தீவில் இறங்கிச் சமையல் செய்து சாப்பிட விரும்புகின்றவர்கள் இறங்கலாம்,' என உத்தரவிட்டான். நானும் மற்றுஞ் சிலரும், சமையலுக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு, அதிலிறங்கினோம். சிறிது நேரத்திற்கெல்லாம் அஃது அசையத் தொடங்கியது. என்னுடன் அதில் இறங்கியவர் யாவரும், சிறிதுந் தயங்காமல், உடனே கப்பலில் ஏறிக்கொண்டனர். நான் மாத்திரம் அச்சத்தினால் ஒன்றுந் தோன்றாமல் அசைவற்று இருந்துவிட்டேன். மாலுமி உடனே பாய் மரத்தை விரித்துக் கப்பலை விரைவாகச் செலுத்தினான். அது தீவு அன்று; ஒரு பெரிய திமிங்கிலம். அது நீரில் மூழ்கும்வரையினும் அதன் முதுகிலே அசைவற்றிருந்தேன். அது முழுதும் நீரில் மூழ்குஞ் சமயத்தில் என்கையில் ஒரு மரத்துண்டு அகப்பட்டது. அக்கட்டை நானும் மற்றவர்களும் அதில் இறங்கும்போது தீ மூட்டுதற்காக எடுத்து வந்த மரத் துண்டுகளில் ஒன்று. நான் அம்மரத்துண்டைப்

பற்றிக்கொண்டு அன்று பகல் முழுதும் கடலிலே நீந்திக் கொண்டிருந்தேன்; 'இனி நாம் பிழைக்கமாட்டோம்! கடலுக்கு நாம் இரையாவது நிச்சயம்!' என்றெண்ணிக் கொண்டேன். கடலானது கொந்தளிப்பு இல்லாமல் இருந்ததனால், நான் கடலில் மூழ்காமலிருந்தேன். என் கண்களுக்கு வேறு கப்பல்களுங் காணப்பட வில்லை. 'ஐயோ! நான் உள்ளது போதும் என்றிராமல் பெரும்பொருளைச் சம்பாதிக்க வேண்டும் எனப் பேராசை கொண்டதனால் அல்லவா இந்தக் கேட்டை அடைந்தேன்? எங்கும் நிறைந்துள்ள இறைவரே, ஓராதரவுமின்றிக் கடலினிடையில் அகப்பட்டுத் தவிக்கும் என்னைக் காத்தருளும்,' என்று கதறினேன். மணியாகவாக எனக்குக் களைப்பு அதிகரித்து வந்தது. கை கால்கள் ஓய்ந்துவிட்டன. கைகள் மாத்திரம் அம்மரத்துண்டைப் பற்றிக்கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரம் நான் அப்படியே இருந்திருப்பேனானல், கடலில் மூழ்கிப்போயிருப்பேன். ஆ! என்ன வியப்பு! ஒரு பெரிய அலையானது தோன்றி என்னை அடித்துக் கொண்டுபோய் ஒரு தீவின் கரையில் ஒதுக்கிவிட்டது.

"அந்தக் கரையானது உயர்ந்ததாகவும் காடு மேடுகள் அடர்ந்ததாகவும் இருந்தது. அக்கரையில், உணவில்லாமையினாலும் கடலில் நெடுநேரம் நீந்தியதனாலும் உண்டான சோர்வினால், மெய்ம்மறந்து படுத்துறங்கினேன். மறுநாட் காலையிற் சூரியனுடைய கிரணங்கள் என்மேற் பட்டன. உடனே எனக்கு உணர்ச்சி உண்டாயிற்று. 'இங்கு நாம் உண்ணுதற்குரிய காய்களில் எவையேனுங் கிடைக்குமா?' என்று எண்ணி மெல்ல


BRAHMA

மெல்ல நகர்ந்து சென்று பார்த்தேன். நல்ல காலத்திற் கறிகுறியாக அங்குச் சில காய்கனிகள் கிடைத்தன. அவற்றை மெல்ல எடுத்து உண்டு, அருகில் இருந்த தெளிந்த ஊற்று நீரைப் பருகிப் பசியைத் தீர்த்துக் கொண்டேன். சிறிது நேரம் அங்கிருந்து களைப்பைத் தீர்த்துக்கொண்டேன். பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரஞ் சென்றேன். அந்த இடத்திற் சில குதிரைகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றைக் கண்டு, 'இவற்றிற்குரியவர்கள் இங்கு அருகில் எங்கேனும் இருப்பார்கள். அவர்களைக் காணலாம்,' என்று நினைத்துப் போனேன். அப்போது ஒரு மனிதன் அங்கு வந்து, 'நீர் யார்?' என்று கேட்டான். நான் என் வரலாற்றை அம்மனிதனுக்குக் கூறினேன். அம்மனிதன் என்னை ஒரு குகைக்கு அழைத்துச் சென்றான். அக்குகையிற் பல மனிதர்கள் இருந்தார்கள். அவர்களைக் கண்டு நான் மிக்க வியப்படைந்தேன். அவர்களைக் கண்டு நான் அடைந்த ஆச்சரியத்தினும் அம்மனிதர்கள் என்னைக் கண்டு அடைந்த ஆச்சரியம் அதிகமானதாகும். அம்மனிதர்கள் என்னை உபசரித்து எனக்கு உணவளித்துத் தாங்களும் உணவருந்தினார்கள். பின்பு நான் அவர்களை நோக்கி, 'நண்பர்களே, நீங்கள் யார்? இக்குகையில் வசிப்பதற்குக் காரணம் யாது?' என்று கேட்டேன். அம்மனிதர்கள், 'நண்பரே, நாங்கள் இந்நாட்டை ஆளும் மைரேச்சு என்னும் மன்னரின் பாகர்கள். இக்குதிரைகள் அவ்வரசருடைய குதிரைகளே. இவற்றை இங்கு மேய விடுவதற்காக அடிக்கடி நாங்கள் வருவது வழக்கம். அதற்காகவே

இன்றும் இங்கு வந்தோம். நீர் எங்களுடன் வாரும்; நாங்கள் உம்மை எங்கள் அரசனிடங் கொண்டுபோய் விடுகின்றோம்,' என்றார்கள். நானும் அதற்குச் சம்மதித்தேன்.

"சிறிது நேரங் கழித்து அப்பாகர்கள் அப்பரிகளோடு என்னையும் அழைத்துச் சென்று, அக்குதிரைகளைக் குதிரைச்சாலையிற் கட்டிவிட்டு, என்னை அவ்வரசரிடத்தில் கொண்டுபோய் விட்டார்கள். அம்மன்னர் என்னை நோக்கி, 'நீ யார்?' என்று கேட்டார். நான் என் வரலாற்றை அம்மன்னருக்குச் சொன்னேன். அவ்வரசர் என்னிடம் இரக்கங் கொண்டு, எனக்கு வேண்டிய பொருள்களை அளித்தனர். நான் அப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு, சில நாட்கள் அந்நகரில் தங்கியிருந்தேன்.

"அப்பட்டினம் கடற்கரையைச் சார்ந்திருக்கிறது. அந்நகரின் அருகில் பல தேசத்து மரக் கலங்களும் வந்து தங்குதற்குரிய துறைமுகம் ஒன்றுண்டு. ஒரு நாள் அங்குள்ளவர்களை, 'பாக்தாத்திலிருந்து கப்பல் இங்கு வருவதுண்டா?' என்று விசாரித்தேன். அவர்கள், 'எல்லா நாட்டு மரக் கலங்களும் இங்கு வருவதுண்டு,' என்றார்கள். அன்றுமுதல் பாக்தாத்திலிருந்து ஏதேனும் கப்பல் வந்திருக்கிறதா என்று விசாரித்துக்கொண்டே இருந்தேன். அத்தீவுக்கருகில் உள்ள காசல் என்னும் மற்றொரு தீவும் மைரேச்சு அரசனுக்குரியதுதான். இராக்காலங்களில் அத்தீவினின்றும் ஒரு வகை வாத்தியம் கேட்கின்றது. அதனை அங்குள்ளவர்கள் தேவ வாத்தியம் என்று கருதுகின்றார்கள். நான் அத்

தீவைப் பார்க்க விரும்பினேன்; அவ்வாறே ஒரு நாள் அத்தீவுக்குச் சென்றேன். அத்தீவின் அருகில் கடலில் விசித்திரமான ஒரு வகை மீன்கள் காணப்படுகின்றன. அவை ஒரு முழ அகலமும் ஆந்தை போன்ற தலைகளும் உடையனவாயிருக்கின்றன. நான் அவற்றையும் மற்றும் அத்தீவிலுள்ள விசேடப் பொருள்களையும் பார்த்துவிட்டு, முன்னிருந்த தீவுக்கு மீண்டு வந்தேன்.

"அப்போது அத்தீவின் துறையில் ஒரு கப்பல் வந்து நங்கூரம் பாய்ச்சித் தங்கியது. உடனே பல ஆட்கள் சரக்குகளை இறக்கிக்கொண்டிருந்தார்கள். அச்சரக்குகளை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். அவற்றுள் சில சரக்குகளின்மீது என் பெயர் குறிக்கப்பட்டிருந்தது. உடனே நான் கப்பல் தலைவனிடஞ் சென்று, 'ஐய, இச்சிப்பங்கள் யாருடையன?' என்று கேட்டேன். அக்கப்பல் தலைவன், என்னை நோக்கி, 'ஐய, இவை சிந்துபாத்தென்பவருடைய சிப்பங்கள். அவ்வர்த்தகர் மற்ற வர்த்தகர்களுடன் என் கப்பலில் ஏறி வந்தார். ஒரு நாள் கடலினிடையில் நான் ஒரு தீவைக் கண்டு, 'இங்கு இறங்க விரும்புகின்றவர்கள் இறங்கலாம்,' என்று உத்தரவிட்டேன். அப்படியே சிந்துபாத்து என்பவரும், மற்றுஞ்சிலரும் சமைத்தற்கு வேண்டிய பொருள்களோடு அத்தீவில் இறங்கினார்கள். அவர்கள் இறங்கின சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தீவு கிடுகிடென்றாடிக் கடலில் மூழ்கிவிட்டது. சிந்துபாத்து என்பவர் கடலுக்கிரையானார். மற்றவர்கள் நீந்தி வந்து கப்பலில் ஏறிக்கொண்டார்கள்.

ஆகையால், இச்சரக்குகளை விற்று இவற்றாற் பெறும் பொருளை அவருடைய உறவினர்களுக்குக் கொடுக்கக் கருதி இருக்கின்றேன்,' என்றனன். நான் அவனை நோக்கி, 'ஐய, கப்பல் தலைவரே, நீர் இறந்துவிட்டான் என்று கருதியிருக்குஞ் சிந்துபாத்து என்னும் அவ்வணிகன் யானே. அங்கு நீர் கண்டது தீவு அன்று; அஃது ஒரு திமிங்கிலம். நான் ஒரு மரத்துண்டைப் பற்றி நீந்திக்கொண்டு கடவுள் அருளால் வந்து இத்தீவை அடைந்தேன்,' என்று கூறினேன். அம்மாலுமி என் சொல்லை நம்பவில்லை.

"அப்போது சில வர்த்தகர்கள் கப்பலினின்றிறங்கினார்கள். அவர்கள் என்னைக் கண்டு வியப்படைந்து, நான் பிழைத்து வந்ததற்கு மிகவுங் களிப்படைந்து, என்னைத் தழுவிக்கொண்டு, 'நண்பரே, கடவுளே உம்மைக் காத்தருளினார்! கடவுளின் திருவருள் வாழ்க!' என்று கடவுளை வாழ்த்தினார்கள்; அதனால் கப்பல் தலைவன் உண்மை உணர்ந்து என்னை நோக்கி, 'நண்பரே, கடவுளின் திருவருள் உலகில் நீடு வாழ்க. இதோ உம்முடைய சரக்குகள் இருக்கின்றன. இனி நீர் இவற்றை உம்முடைய விருப்பம் போல உபயோகப் படுத்திக்கொள்ளலாம்,' என்று சொல்லி, என் சரக்குகளை என்னிடம் ஒப்புவித்தனன்.

"நான் அக்கப்பல் தலைவனது மேன்மையான குணத்தைக்கண்டு மகிழ்ந்து, என்னுடைய சரக்குகளிற் சில சிறந்த பொருள்களை எடுத்து அவனுக்குக் கொடுக்கப் போனேன். அவ்வுத்தமன், 'ஐய, நான் பதில் உதவியைக் கருதி இதைச் செய்திலேன். இஃது எனது கடமை. தன்னுடைய கடமையை 'முறை

தவறுமல் செய்யும் மனிதனுக்குக் கடவுளின் திருவருள் வாய்க்கும் என்பது எனது துணிபு. எனக்கு வேண்டுவது அதுவே. ஆதலின், இப்பொருள்களை நான் பெற்றுக்கொள்ளேன்,' என்று உறுதியுடன் கூறிவிட்டனன். நான், 'இவனே உத்தமனான மனிதன். 'எவ்வகையிலேனும் பணத்தைச் சம்பாதிப்பதே நாம் அடைதற்குரிய பயன்,' என்று எண்ணுகின்றவர்கள் இம்மனிதனை ஒரு பித்தன் என்றே கருதுவார்கள். கடவுள் அருளிய அறநெறிகள் இப்படிப்பட்ட உத்தம குணமுடையவர்களாலேதான் உலகில் விளங்குகின்றன,' என்று எனக்குள் எண்ணி, அக்கப்பல் தலைவனை நோக்கி, 'ஐய, கடவுளின் திருவருள் உம்மைப் போன்ற உத்தமமான குணமுடையவர்களின் உடைமையாகும். உம்முடைய உயர்ந்த குணம் வாழ்க,' என்று கூறி, அவனுக்கு என் அன்போடு கூடிய வந்தனத்தைச் செலுத்தினேன்.

"பிறகு வேறு சில சிறந்த பொருள்களைக் கொண்டு சென்று, மைரேச்சு என்னும் அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தேன். அம்மன்னன், 'இவைகள் உனக்கு எப்படிக் கிடைத்தன?' என்று கேட்டான். நான் அப்பொருள்கள் என்னுடையன என்பதையும், அவை என்னிடம் வந்து சேர்ந்த விதத்தையும், அவ்வரசனுக்குக் கூறினேன். அவ்வேந்தன் மகிழ்ந்து, பல ஆடையணிகளை எனக்கு அளித்தான். நான் அவற்றைப் பெற்றுக்கொண்டேன். பிறகு என்னுடைய சரக்குகளை அந்நாட்டிலுள்ள கர்ப்பூரம், சாதிக்காய், இலவங்கம், மிளகு, சுக்கு முதலிய பொருள்களுக்கு மாற்றிக்கொண்டு, அக்கப்பலில் ஏறிப் புறப்பட்டேன்.

"கப்பல் பல தீவுகளையுங் கடந்து பால்சோராப் பட்டினத்தை அடைந்தது. பிறகு நான் புறப்பட்டு இங்கு வந்து என் குடும்பத்தாரைக் கண்டேன். என் மனைவி முதலியவர்கள் மிகவும் மகிழ்ந்து, என்னை வரவேற்று உபசரித்தார்கள். நான் சம்பாதித்து வந்த பெரும்பொருளில் ஒரு பகுதியினால் பெரிய வீட்டைக் கட்டித் தோட்டம் முதலியவைகளை அமைத்தேன்; ஏழைகளுக்கு என்னாலான பல உதவிகளைச் செய்து வந்தேன். நான் கப்பல் யாத்திரையில் அடைந்த துன்பங்களையெல்லாம் மறந்து, என் சுற்றத்தவர்களோடு இன்பமாக வாழ்ந்து வந்தேன்," என்று கூறி அதனோடு தன் வரலாற்றை நிறுத்தினான்.

உடனே பல வகை வாத்தியங்கள் முழங்கின. பணியாளர்கள் அங்கு இருந்தவர் எல்லோருக்கும் வெற்றிலை பாக்கும் பூவுங் கொடுத்து, பனிநீர் தெளித்தார்கள். மாலையாயிற்று. சிந்துபாத்து நூறு சவரன் அடங்கிய ஒரு பையை இந்துபாத்தினிடங் கொடுத்து, 'நண்பரே, நீர் இப்போது உம்முடைய வீட்டிற்குச் சென்று, நாளைக்கு இங்கு வந்து என்னுடைய வரலாறுகளில் மற்றுஞ் சிலவற்றைக் கேட்பீராக,' என்று கூறி, அவனை அனுப்பினான். மற்றவர்களும் தங்கள் தங்கள் மனைக்குச் சென்றார்கள்.

இந்துபாத்து, தன் மனையை அடைந்து, தனக்குச் சிந்துபாத்து செய்த உபசாரத்தின் மேன்மை முதலியவற்றைத் தன் மனைவி முதலியவர்களிடம் கூறினான். அவர்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து, சிந்துபாத்தை அன்புடன் வாழ்த்தினார்கள்.

இரண்டாங் கப்பல் யாத்திரை

இந்துபாத்து மறு நாள் நல்லஆடைகளை உடுத்துக் கொண்டு, சிந்துபாத்தின் மாளிகைக்கு வந்தான். சிந்துபாத்து அவனை முகமலர்ச்சியுடன் வரவேற்று, அன்போடு இன்மொழிகளைக் கூறி உபசரித்து, ஒரு சிறந்த நாற்காலியில் உட்காருவித்தான். சிந்துபாத்தின் மற்ற நண்பர்களும் வந்தார்கள். சிந்துபாத்து அவர்களையும் அவ்வாறே வரவேற்று உபசரித்து, நாற்காலிகளில் உட்காருவித்தான். அவர்கள் சிந்துபாத்திடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் பணியாளர்கள் அனைவருக்கும் பண்ணிகாரங்களுடனும், பழங்களுடனும், அடிசிலைப் பரிமாறினார்கள்; அனைவரும் உண்டபின் வெற்றிலை பாக்கு பூ முதலியன வழங்கினார்கள்.

பிறகு சிந்துபாத்து இந்துபாத்து முதலியவர்களைப் பார்த்து, "நண்பர்களே, எனது இரண்டாங் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கேளுங்கள்:' என்று அதனைப் பற்றிக் கூறலானான்:

"நான் இவ்வாறு முதற் கப்பல் யாத்திரையிற் சம்பாதித்த பொருளை வைத்துக்கொண்டு சிறிது காலம் இன்பமாக இங்கு வாழ்ந்திருந்தேன். பிறகு எனக்கு இன்னும் பொருளைத் தேடவேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. ஆகையால், மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், துயில் கொள்ளாமலும், இரவும் பகலும் வருந்தி, வர்த்தகத்திற்கு வேண்டிய சரக்குகளை வாங்கிச் சேர்த்தேன். பின்பு பால்சோராப் பட்டி

னத்தை அடைந்து, அப்போது அங்குவந்திருந்த கப்ப லில் என் சரக்குகளுடன் ஏறினேன். அக்கப்பலில் என் னுடன் ஏறிய மற்ற வர்த்தகர்கள், தங்கள் நன்மையை யே கருதுபவர்கள்; பிறருடைய வருத்தங்களைச் சிறி தும் கவனியாதவர்கள் ; ஆபத்துக்குதவாத அரிய நண் பர்கள். ஆனால், அவர்கள் தன்மையை நான் அப் பொழுது அறிந்துகொள்ளவில்லை. பொன் பூச்சிட்ட பித்தளை மணிகளின் தன்மை அவற்றை உரை கல்லில் இட்டு உரைத்த பிறகு விளங்குவதுபோல, அவர்க ளோடு சில நாட்கள் பழகிய பிறகுதான் அவர்களுடைய தன்மை எனக்குத் தெரிந்தது.

"நான் அப்படிப்பட்ட வர்த்தகர்களுடன் சென் றேன். நானும் அவர்களும் பல தீவுகளில் இறங்கிமுன் போலவே சில சரக்குகளை விற்றுச் சில சரக்குகளை வேறு சரக்குகளுக்குப் பதிலாக மாற்றிக்கொண்டோம். இவ்வாறு நாங்கள் வியாபாரஞ் செய்துகொண்டுபோகை யில், ஒரு நாள் ஒரு தீவைக் கண்டு, அதில் இறங்கி னோம். அதில் எங்குப் பார்த்தாலும் மிகவும் உயர்ந்த மரங்களும் செடிகளும் சூரியனுடைய கதிர்கள் உள் நுழையாதபடி அடர்ந்திருந்தன. தரையில் எங்கும் பச்சுப்பச்செனப் புற்கள் பரவி இருந்தன. சில பூங் கொடிகள் மரங்களைப் பின்னிக்கொண்டு படர்ந்திருந் தன. சில பூங்கொடிகள் செடிகளின்மீது படர்ந்து பந்தலிட்டாற்போல விளங்கின. பல இடங்களிலும் தெளிந்த நீரோடைகள் காணப்பட்டன. மலையருவிகள் சில இடங்களிற் சிறுசிறு கால்களாக ஓடிக்கொண்டிருந் தன. ஆனால், அங்கு மனிதர் யாரும் காணப்பட்டிலர்.

அந்த இடம், கப்பல்வியாபாரிகள் வந்து தங்கித் தங்கள் ஆயாசந் தீர்த்துக்கொள்ளும்பொருட்டுக் கடவுளால் அமைக்கப்பட்ட பூஞ்சோலையே என்று கண்டோர் யாவருங் கருதும்படி விளங்கியது.

"என்னுடன் அங்கு இறங்கிய வர்த்தகர்களிற்சிலர் மலர்களையும், சிலர் கனிகளையும் பறிக்கச் சென்றனர். நான் நல்ல சுவையுள்ள சில தின்பண்டங்களை எடுத்துக் கொண்டு போய், ஒரு நீரோடையின் அருகில் இருந்த இரண்டு பெரிய மரங்களுக்கிடையில் உட்கார்ந்து, அவற்றைத் தின்று, அவ்வோடையின் நீரைப் பருகினேன். கப்பல் யாத்திரையினால் உண்டான ஆயாசத்தினால் நான் நன்றாய்த் தூங்கிவிட்டேன். நான் அங்கு எவ்வளவு நேரம் தூங்கினேன் என்பது எனக்குத் தெரியாது. நான் தூங்கியெழுந்து பார்த்தபோது கப்பல் காணப்படவில்லை. நான் மிகவுந் திகைப்படைந்து சுற்றுப் பக்கங்களில் ஓடிப் பார்த்தேன். என்னுடன் அத்தீவில் இறங்கியவர்களில் ஒருவரையுங்கண்டிலேன். நான் மிக அஞ்சி நடுங்கிக் கரையோரஞ் சென்று பார்த்தேன். கப்பலானது வெகு தூரத்திலே செல்வதைக் கண்டேன். நான் அக்கப்பலையே நோக்கிக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குள் கப்பல் என் கண்களுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது.

"கப்பல் மறைந்தவுடன் என் மனம் மிகவுந் தடுமாறிவிட்டது. உடலில் சோர்வு உண்டாயிற்று. கண்களினின்று நீர் தாரைதாரையாகப் பெருகியது. மனத்தை வருத்தும் பல நினைவுகள் அடுத்தடுத்துத் தோன்றிக் கொண்டிருந்தன. ஆதலின், 'ஐயோ! நான் முதலாங்

கப்பல் யாத்திரையிற் சம்பாதித்த பொருள் என்னுயுட் கால முழுதும் மனைவி மக்களோடு கூடி இன்பமாகக் காலத்தைக் கழிப்பதற்குப் போதியதாயிருக்க, நான் ஏன் இந்த இரண்டாங் கப்பல் யாத்திரை செய்யத் தொடங்கினேன்! பொருள்மேல் உண்டான பேராசை தானே என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டது! உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள்கின்றவர்களும் தங்கள் கட்டளையைக் கடலின்மீதும் ஆகாயத்தின் கண்ணுஞ் செலுத்த விரும்புகின்றார்கள். நெடுநாள் உலகில் வாழ்ந்தவர்களும், 'இன்னும் பல ஆண்டுகள் வாழவேண்டும்,' என்று விரும்பி, அதற்கு வேண்டிய மருந்துகளைத் தேடி அலைகின்றார்கள். பிறர் நிகர் இல்லை என்னும்படி பெரும்பொருள் படைத்தவர் களும் இரசவாதம் முதலிய வித்தையினால் உலகிலுள்ள பித்தளை முதலிய மற்ற உலோகங்களையெல்லாம் பசும் பொன்னாக்கி நிதிக் குவியல்களை அளவின்றிக் குவித்து வைக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். இவற்றிற் குக் காரணம் ஆசையே அன்றோ? ஆசைக்கு அடிமைப் பட்டவர்கள் மன அமைதியுடன் வாழ்தல் முடியாது. அவர்களுடைய மேல் தோற்றம் உள்ளே புழுக்கள் நிரம்பிச் சொத்தைப்பட்டுள்ள பழத்தின் மேல் தோற்றம் போன்றதே. ஆ! நான் அறிவு சிறிதும் இல்லாதவனே! வெள்ளம் வருவதற்கு முன் அணை கோலி அதனைத் தடுக்காமல் வெள்ளம் பெருகி வந்து கரையை உடைத்துக்கொண்டு போன பிறகு அதனைப் பற்றிச் சிந்திப்பவர்களின் சிந்தனையையே என் சிந்தனை ஒத்ததாயிருக்கின்றது. இனி என் கதி நடுக்கடலிற்

கவிழ்ந்த கப்பலில் இருப்பவர்களின் கதியைப் போன்றதே!' என்று எண்ணி மனச் சோர்வடைந்து, சிறிது நேரம் பூமியில் உயிரற்றவனைப்போல விழுந்து கிடந்தேன்.

"பிறகு எழுந்து, 'கேட்டினுறுதி கூட்டுமுடைமை,' என்னும் முதுமொழியை எண்ணி, நான் ஒருவாறு மனந்தேறிக் கடவுளைத் தொழுது ஒரு பெரிய மரத்தில் ஏறி உயிர் நம்பிக்கை அடைதற்குரிய ஆதரவு ஏதேனும் அகப்படுமா என்று கடற்புறமாக நோக்கினேன். மிகவும் ஆழமான அப்பெருங்கடலும் ஆகாயமுமன்றி வேறொன்றும் என் கண்களுக்குப் புலப்படவில்லை. பிறகு நிலத்தின் பக்கமாக நோக்கினேன். நிலத்திற் சிறிது தூரத்தில் ஏதோவொன்று வெண்ணிறமுடையதாகக் காணப்பட்டது. உடனே மரத்தைவிட்டிறங்கி மிச்சமாயிருந்த தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு, அதன் அருகில் போனேன். அஃது மழமழப்பாகவும் மிகவும் பெரிதாகவும் இருந்தது. அஃது இன்னது என எனக்குத் தெரியவில்லை. அதில் வழியேனும், சிறு துவாரமேனும் இருக்கின்றதா என்று அதனைச் சுற்றிப் பார்த்தேன். எதுவுங் காணப்படவில்லை. இப்படி நான் அதனை நோக்கிக்கொண்டிருக்கையில் மேகங்கள் வந்து மூடிக்கொண்டாற்போல ஆகாயம் இருண்டு போயிற்று. இவ்வாறு ஆகாயம் இருண்டுவிட்டதற்குக் காரணம் என்ன என்றெண்ணி, வானத்தை நோக்கினேன். 'சிறகுகளைப் பெற்று வானத்திற் பறக்கும் மலைதான் இது!' என்று கண்டோர் நினைக்கும்படி மிகவும் பெரிதாகிய பறவையொன்று பறந்து வருதலைக்

கண்டேன். அதனைக் கண்டு மிகவும் வியப்படைந்து, 'கண்ட பேரண்டம் என்று சொல்லப்படும் பறவை இதுவே ; இதன் முட்டையே இது,' என்று நிச்சயித்துக்கொண்டேன். அப்பறவை மெதுவாகத் தரையில் இறங்கி, அம்முட்டையின்மீது உட்கார்ந்து, அடை காக்கத் தொடங்கியது.

"நான் அப்பறவை தரையில் உட்கார்ந்ததைக்கண்டு ஏதேனும் ஒருபாயஞ் செய்து அதன் உதவியினால் அத்தீவை விட்டு வேறொரு தீவை அடைய வேண்டும் என்று எண்ணினேன். ஆகையால், மெல்ல மெல்ல நகர்ந்து அதனருகிற் சென்றேன். அஃது அப்பொழுது வேறொன்றையும் பாராமல், அம்முட்டையை அடை காப்பதிலேயே நோக்கங் கொண்டிருந்தது. நான் அதனை அறிந்து, என் தலைப்பாகைத் துணியின் ஒரு முனையை அதன் கால்களுள் ஒன்றில் நன்றாய்க் கட்டிவிட்டு, மற்றொரு முனையை என் இடுப்பிலிருந்து மார்பு வரையிலும் நன்றாய்ச் சுற்றிக் கட்டிக்கொண்டேன். மனிதர்கள் யாருமில்லாத அந்தத் தீவிலே இருப்பது எனக்கு மிக்க சஞ்சலத்தை உண்டாக்கியதனால், நான் உயிருக்குத் துணிந்தே அக்காரியத்தைச் செய்தேன். அப்பறவை இரவு முழுதும் அம்முட்டையை அடை காத்திருந்து, பொழுது விடிந்தவுடன் என் பொறிகள் கலங்கும்படி மிகஉயரத்தில் எழும்பிப்பறந்துசென்றது; சிறிது நேரம் அவ்வாறு பறந்து சென்று, ஓரிடத்தில் தரையில் இறங்கியது. நான் பூமியில் வந்துவிட்டதை அறிந்தவுடன் என் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டேன். உடனே அப்பறவை அப்பொழுது அங்குக்

காணப்பட்ட மிகவும் பெரியதாகிய மலைப் பாம்பைத் தன் பெரிய அலகினுற்பற்றி எடுத்துக்கொண்டு பறந்து போயிற்று.

"அப்பறவை என்னைவிட்டுச்சென்ற இடம் நான்கு பக்கங்களிலும் மலைகளாற் சூழப்பட்டு அழகாய் விளங்கும் ஒரு பள்ளத்தாக்கு. அம்மலைகள் மேக மண்டலத்தையும் ஊடுருவிக்கொண்டு சென்று, மிக உயர்ந்திருந்தன. கண்டோர் யாவரும் ஆச்சரியமடையத் தக்க மிகப் பருமனுன வச்சிரக்கற்கள் அவ்விடத்தில் எங்கும் இறைந்து கிடந்தன. அவற்றைக் கண்டவுடன் என் மனத்தில் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனல், சிறிது தூரத்தில் யானையையும் விழுங்கத்தக்கபருமனும்நீளமுமுள்ள மலைப்பாம்புகள் கிடக்கக் கண்டேன். முன்னே என் மனத்தில் எழுந்த களிப்பின் பெருக்கு அப்பாம்புகளைக் கண்ட பிறகு குறையத் தொடங்கிற்று. அப்பாம்புகள் தங்கள் பகையாகிய கண்ட பேரண்டப் பறவைக்குப் பயந்து, பகற்காலமெல்லாம் குகைகளில் ஒளித்துக்கொண்டிருந்து, இராப்பொழுதில் வெளிப்படுபவை. அவற்றிற்கு இரவில் உணவு கிடைக்காவிடின் பகற் காலத்திலும் குகையினின்று வெளிவருவதுண்டு. இத்தகைய பள்ளத்தாக்கில் நான் சிறிது நேரம் உலாவியும், சிறுது நேரம் படுத்துக்கொண்டும் பகற்காலத்தைக் கழித்தேன்.

"மாலைப்பொழுது வந்ததும் என்னிடத்திலிருந்த தின்பண்டங்களிற் சிலவற்றைத் தின்றுவிட்டு, உட்கார்ந்தபடியே உறங்கத் தொடங்கினேன். என் கண் மூடியதும் மூடாததுமாய் இருக்கையில், இறைச்சித்

துண்டுகள் என்னருகிலும் மற்ற இடங்களிலும் பருமனை கல் மழைத் துளிகள் விழுதல்போல விழத் தொடங்கின. 'சில தீவுகளில் மலைகளாற் சூழப்பட்ட பள்ளத்தாக்குகளில் மிகவும் பருமனை வச்சிரக் கற்கள் இருக்கின்றன. சில வியாபாரிகள் அவற்றைச் சில தந்திரங்கள் செய்து எடுத்துக்கொள்ளுகின்றார்கள்,' என்று பல வர்த்தகர்கள் நான் ஊரில் இருக்கையில் என்னிடம் கூறுவார்கள். நான் அப்பொழுது அவர்கள் சொல்லைப் பொய்யென்றே எண்ணியிருந்தேன். அங்குப் பருமனை அம்மணிகளைக் கண்டதனாலும் இறைச்சித் துண்டுகள் அங்கு விழுந்ததனாலும் அவர்கள் சொன்னவை உண்மைதான் என்பது எனக்கு விளங்கியது. அங்குள்ள கூளிகள் மற்ற இடங்களிலுள்ள எல்லாக் கூளிகளினும் மிகப் பெரியவை; மிக்க பலமும் உடையவை. அம்மலைச்சாரல்களிலிருந்து சில வர்த்தகர்கள் அந்த இறைச்சித் துண்டுகளை எறிந்தார்கள்.

“நண்பர்களே, அவ்வர்த்தகர்கள் அம்மணிகளை எடுக்கச் செய்யும் உபாயத்தைக் கூறுகின்றேன்; கேளுங்கள்: அவ்விதப் பள்ளத்தாக்கான இடங்களிலுள்ள கூளிகள் மற்ற இடங்களிலுள்ள கூளிகளைவிட மிகப் பெரியனவாகவும் மிக்க பலமுடையனவாகவும் இருக்கும். அவை அம்மலைகளின் சிகரங்களில் கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கும். அவ்வாறு அவைகள் குஞ்சு பொரித்திருக்குஞ் சமயம் அறிந்து, வர்த்தகர்கள் இறைச்சித் துண்டுகளைப் பள்ளத்தாக்கில் விழும்படி வீசி எறிவார்கள். அவ்விறைச்சித் துண்டுகளை அந்தக் கூளிகள் தங்கள் குஞ்சுகளுக்குக் கொடுக்க எடுத்

துச் செல்லும். அப்போது வர்த்தகர்கள் உடனே அங்குச் சென்று, அக்கூளிகளை விரட்டி ஓட்டிவிட்டு, அவ்விறைச்சித் துண்டுகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் மணிகளை எடுத்துக்கொள்வார்கள். வர்த்தகர்கள் அவ்விதப் பள்ளத்தாக்குகளில் வசிக்கும் மலைப்பாம்புகளுக்கு அஞ்சி, அங்குச் செல்லாமலே அங்குள்ள மணிகளை எடுக்க இந்த உபாயத்தைச் செய்வது வழக்கம்.

"இதனை நான் முன்பே கேட்டறிந்தவனுகையால், சில வர்த்தகர்கள் மலைச் சாரல்களின் பக்கம் வந்திருக்கின்றூர்கள் என்று நிச்சயித்துக்கொண்டேன். உடனே நான் அப்பள்ளத்தாக்கில் இருந்த மணிகளில் பெரிய மணிகளைப் பொறுக்கி, உணவு வைத்திருந்த தோற்பையில் வைத்துக்கொண்டேன்; பின்பு அவ்விறைச்சித் துண்டுகளிற் பெரிய துண்டுகள் சிலவற்றை எடுத்து, என் பாகைத்துணியின் ஒரு மூலையில் வைத்து முடிந்துகொண்டேன்; பிறகு அவற்றை இடுப்பில் வைத்துப் பாகைத் துணியின் மற்றொரு முனையினுல் நன்றுய்க் கட்டிக்கொண்டு, பூமியிற் கவிழ்ந்து படுத்துக்கொண்டேன். அவ்விறைச்சித் துண்டுகளை எடுத்துச் சென்று கொண்டிருந்த கூளிகளுள் மிகவும் பெரிதாகிய ஒன்று, என்னைத் தன் அலகினுல் கவ்வி எடுத்துச் சென்று, தன் பஞ்சரத்தின் அருகில் வைத்தது. அப்போது வர்த்தகர் சிலர் அங்கு வந்து, பேரிரைச்சலிட்டு, அதை வெருட்டி ஓட்டினர்.

"அவர்களில்ஒருவன் என்னருகில் வந்து என்னைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றுன். பிறகு அவன் ஒரு

வாறு தேறுதல் அடைந்து, என் வரலாற்றை விசாரியாமலே என்னை நோக்கி, 'நீ என் பொருளை எல்லாம் அபகரித்துக்கொள்ள வந்திருக்கின்றாயா?' என்று மிக்க கோபத்துடன் கூறினான். நான் அவனைப்பார்த்து, 'ஐயா, நீ சிறிதும் வருத்தப்பட வேண்டா. என்னிடத்தில் மிகப் பெரியனவாகிய பல வச்சிரக் கற்கள் இருக்கின்றன. அவற்றுட் சிலவற்றை உனக்குக் கொடுக்கின்றேன். இக்கூட்டின் அருகிலுள்ள வச்சிரக் கற்களையும் நீயே எடுத்துக்கொள்,' என்று கூறி, என்னிடமுள்ள வச்சிரக்கற்களை அவனுக்குக் காட்டிக் கொண்டிருந்தேன். அப்போது மற்ற வர்த்தகர்களும் அங்கு வந்து, அவ்வச்சிரக் கற்களைப் பார்த்து, வியப்படைந்தார்கள். பிறகு அவ்வணிகர்கள் என்னை நோக்கி, 'நண்பரே, நீர் எவ்வாறு இங்கு வந்து சேர்ந்தீர்? என்று கேட்டார்கள். நான் என் வரலாற்றை அவர்களுக்குச் சொன்னேன். அவர்கள் என் வரலாற்றைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, என்னையும் என்னுடன் வாதமிட்ட வர்த்தகனையும் தாங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

"அங்கு என் பையிலிருந்த வச்சிரக்கற்களை அவர்களுக்குக் காட்டினேன். அவர்கள் அவற்றின் பருமனைக் கண்டு வியப்படைந்து, 'நண்பரே, இவ்வளவு பெரிய வச்சிரக் கற்களை இதுவரையிலும் நாங்கள் கண்டிலோம். நீர் இனி உலகிலுள்ள பெருஞ்செல்வர்களுள் ஒருவராய் வாழ்வீர். நீர் இனித் துன்பங்கள் ஒழிந்து வாழும்பொருட்டுக் கடவுள் இப்பெருஞ்செல்வத்தை அளித்தார். கடவுளின் திருவருள் வாழ்க!'

என்று கூறினார்கள். என்னுடன் வாதமிட்ட வர்த்தக னுக்கு நான் முன்னே சொன்னபடி சில வச்சிரக் கற்களைக் கொடுத்தேன். பிறகு அந்த வர்த்தகர்கள் எல்லாம் தாங்கள் எடுத்து வந்த இறைச்சித் துண்டு களில் ஒட்டிக்கொண்டிருக்கும் வச்சிரக் கற்களை எடுத் துக்கொண்டு, இறைச்சித் துண்டுகளை எறிந்துவிட்டு, அக்கற்களை அவர்கள் தங்களுக்குள் சமமாகப் பங் கிட்டுக்கொண்டார்கள்.

“பிறகு நாங்கள் அனைவரும் கப்பலேறிப் புறப்பட் டுச் சென்று, முதலில் ரோப்பா தீவில் இறங்கினோம். என்னுடைய வச்சிரக் கற்களிற் சிலவற்றிற்கு அங் குள்ள சரக்குகளை மாற்றிக்கொண்டேன். பிறகு மற் றும் பல தீவுகளுக்குச் சென்று அவ்வாறே என் வச்சி ரக் கற்களுக்கு அங்குள்ள சரக்குகளை மாற்றிக்கொண் டேன். முடிவில் கப்பல் பால்சோரா நகரத்தின் துறை முகத்தை வந்தடைந்தது. உடனே நான் என் பொருட் குவியலோடு இப்பட்டணத்தை வந்தடைந்து, பல தருமங்களைச் செய்து, என் சுற்றத்தவர்களோடு கூடிச் சுகமாக வாழ்ந்து வந்தேன்.”

சிந்துபாத்து இப்படித் தன் இரண்டாங் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கூறிமுடித்தான். உடனே அங்கிருந்தார் அனைவருக்கும் வெற்றிலை பாக்குப் பூ முதலியன பணியாளர்களால் வழங்கப்பட்டன. சிந்து பாத்து இந்துபாத்துக்கு நூறு சவரன்கள் அடங்கிய பையைக் கொடுத்தனன்; பிறகு அனைவரையும் பார்த்து, “நண்பர்களே, நாளைய தினம்வந்து என் கப்பல் யாத் திரையின் மற்றொரு பகுதியைக் கேளுங்கள்,” என்று கூறி, அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினான்.

மூன்றாங் கப்பல் யாத்திரை

மறு நாள் சிந்துபாத்தின் நண்பர்களாகிய இந்து பாத்து முதலியவர்கள் அவனுடைய மாளிகைக்கு வந்தார்கள். சிந்துபாத்து அவர்களை அன்புடன் உபசரித்தான். பிறகு அவர்கள் அனைவரும் சிந்துபாத்துடன் இருந்து பல வகையான இன்சுவைப் பண்ணிகாரங்களுடன் உணவருந்தி உயர்ந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். சிந்துபாத்து அவர்களுக்குத் தன் மூன்றாங் கப்பல் யாத்திரையின் திறத்தைக் கூறத் தொடங்கினான்:

"நண்பர்களே, நான் இரண்டாமுறை கப்பல் யாத்திரை செய்துவந்த பிறகு சில ஆண்டுகள் சுகமாகக் காலத்தைக்கழித்துவந்தேன். இரண்டு யாத்திரையிலும் எனக்கு மிக்க பொருள் கிடைத்தும், அப்பொருளை வைத்துக்கொண்டு காலத்தைக் கழிப்பதில் எனக்கு விருப்பமுண்டாகவில்லை. ஒரு நாள் நான், 'ஆ! நாம் இரண்டாமுறை யாத்திரை செய்துவந்த பிறகு இத்தனை நாட்களை வீணாகக் கழித்துவிட்டோமே!' என்று எண்ணினேன். நான் முன் யாத்திரைகளில் அடைந்த துன்பங்களையெல்லாம் மறந்துவிட்டேன். மீண்டும் கப்பல் யாத்திரை செய்து பொருளீட்ட வேண்டும் என்னும் எண்ணம் என் மனத்திற் கிளர்ந்தெழுந்தது. உடனே நான் வெளி நாடுகளில் விற்றற்குரிய சரக்குகளை மிகுதியாக வாங்கிச் சேர்த்துக்கொண்டு பால்சோரா நகரை அடைந்து, அங்கு வந்திருந்த வேறு சில வர்த்தகர்களோடு கப்பலில் ஏறினேன். அன்னம் பெரிய ஏரியில் நீந்திச் செல்லுதல்போலக் கப்பல் கடலிற்

சென்றது. யாத்திரை செய்யப் புறப்பட்ட எங்களை எதிர்கொண்டு வாழ்த்தி வழியனுப்பும் சுற்றத்தினரைப் போலக் கடலில் அலைகள் எழுந்து ஒலித்தன.

"நாங்கள் பல பட்டினங்களின் துறைகளில் இறங்கி வியாபாரம் செய்தோம். அந்த வியாபாரத்தில் எங்களுக்கு மிக்க லாபங் கிடைத்தது. ஒரு நாள் எங்கள் கப்பல் திசை தப்பி நடுக்கடலிற் சென்றது. நெருப் போடு காற்றுஞ் சேர்ந்தாற்போல அப்போது பெருங் காற்றும் அடிக்கத் தொடங்கியது. அந்தக் காற்றைக் கண்டபோது எங்கள் குடல் நடுங்கியது; நா வறண் டது; மார்பு படபடென அடித்துக்கொண்டது. நாங் கள், 'இனி நம்முடைய கதி என்னவாகுமோ!' என்று எண்ணி வருந்தினேம். அந்த வருத்தத்தை நாங்கள் பல நாள் அனுபவிக்கும்படி அந்தக் காற்றுப் பல நாள் அளவும் ஓயாமல் அடித்தது. முடிவில் அக் காற்று எங்கள் கப்பலை அடித்துக்கொண்டுபோய் ஏதோ ஒரு தீவின் கரையிற் சேர்த்தது.

"எங்கள் கப்பல் தலைவனுக்கு அத்துறையில் இறங் கச் சிறிதும் மனமில்லை. ஆயினும், நாங்கள் அம்மாலு மியை வற்புறுத்தி நங்கூரம் போடுவித்துப் பாய்களைச் சுருட்டுவித்தோம். பிறகு அம்மாலுமி எங்களை நோக்கி, 'நண்பர்களே, இத்தீவிலும், இதனை அடுத்த தீவுகளி லும் உள்ளவர்கள் மிருகத் தன்மையையுடைய மனிதர் கள். அவர்கள் சித்திரக் குள்ளர்களாய் இருப்பினும், பிறரை வருத்துவதில் மிகவுந் தேர்ந்தவர்கள். வெட் டுக் கிளிகளின் கூட்டங்கள்போல அவர்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டு வருவார்கள். அவர்கள் குள்ளர்

கள்தாமே என்று எண்ணி, நாம் அவர்களை எதிர்ப் போமானால், நம்முடைய உயிர் போவது நிச்சயம்,' என்று கூறினன். கப்பல் தலைவன் சொல்லைக் கேட்டு நாங்கள் மனங் கலங்கி நடுங்கினேம்; அவ்விதக் கொடிய மனிதர்கள் கையில் அகப்பட்டுத் துன்புற்று உயிரை விடுவதினும் கடலில் விழுந்து இறப்பது நல மாம் என்று எங்களுக்குள் நிச்சயித்துக்கொண் டோம். நாங்கள் எண்ணியபடி செய்வதற்குள் அக் கொடியவர்கள் பெருந்திரளாகவந்து எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். நாங்கள் அவர்களைக் கண்டு, பெரு நெருப்பாற் சூழப்பட்டவர்களைப் போலத் தவித்தோம். அவர்களின் உயரம் இரண்டடிதான். அவர்கள் தலை களில் செம்பட்டை மயிர் அடர்ந்திருந்தது. அவர்கள் இருள் போன்ற கருநிறமுடையவர்கள். ஆகையால், அவர்கள் ஒரு முனையில் நெருப்புப் பற்றிய கரிய கட்டைகளைப்போலத் தோன்றினர்கள். அக்கொடியவர் கள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக்கொண்டு கப்பலின் மேல் ஏறி வந்தார்கள். நாங்கள் அக்கொடியவர்களால் சாவது நிச்சயம் என்று எண்ணிக்கொண்டு, ஒன்றுஞ் செய்யாமலும் பேசாமலும் இருந்தோம். அவர்கள் கப்பற் பாய்களைக் கீழே இறக்கி, அவற்றின் கயிறுகளைத் துண்டு துண்டாக அறுத்து எறிந்து, கப்பலைக் கரைக் குத் தள்ளிக்கொண்டு போனர்கள்; பிறகு விரைவில் கப்பலைவிட்டிறங்கும்படி எங்களுக்குச் சைகை காட்டி னர்கள். நாங்கள் அவ்வாறே கப்பலை விட்டிறங்கினேம். பின்பு அத்தீயவர்கள் கப்பலைத் தாங்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்திற்குத் தள்ளிக்கொண்டு போய்விட்டார்கள்.

"பிறகு நாங்கள், 'அந்தோ! மாலுமி பேச்சையுங் கேளாமல் இக்கொடிய துன்பத்தைத் தரும் இடத்தில் வந்தகப்பட்டுக்கொண்டோமே!' என்று எண்ணி ஏங்கி வருந்தினோம். நாங்கள் அவ்விடத்தினின்று தப்பிச் செல்லுதற்குரிய வழியொன்றுந் தோன்றாமையினால், அத்தீவுக்குட் சென்றோம். நாங்கள் சென்ற வழியில் உண்ணுதற்குரிய கனிகள் நிரம்பிய மரங்கள் இருந்தன. 'ஐயோ! அநியாயமாக உயிரைவிடும்படியான நிலை நேர்ந்ததே!' என்னும் ஏக்கத்தினால், அவற்றைப் பறித்துத் தின்பதில் எங்கள் மனஞ் செல்லவில்லை. நாங்கள் சிறிது தூரஞ் சென்றபோது அங்கோர் இடத்தில் ஒரு மாளிகை காணப்பட்டது. அது மிக்க அழகுடையதாகவும், மிக உயரமானதாகவும் இருந்தது. அதன் வாயிற்படியில் இபோனி மரத்தினாற் செய்யப்பட்ட இரட்டைக் கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கதவுகள் மூடப்பட்டிருந்தன. அவற்றைத் திறப்பது கடினமாகவே இருந்தது. நாங்கள் வருந்தி அவற்றைத் திறந்துகொண்டு உட்சென்று, வாசலை அடைந்தோம். வாசலைச்சுற்றிலும் ஒழுங்காகத் தூண்கள் நிறுத்தப்பட்ட தாழ்வாரம் இருந்தது. அத்தூண்களில் அழகான சித்திரங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன. அம்மாளிகையிற் பல அறைகள் இருந்தன. வாசலின் ஒரு பக்கத்தில் மனிதர் எலும்புகள் அம்பாரம்போலக் குவிந்திருந்தன; மற்றொரு புறம் இரும்புக் கம்பிகள் கிடந்தன. அவற்றைக்கண்டபோது, 'இவர்கள் உயிர்கள் உடலில் இருக்கின்றனவோ, உடலைவிட்டுப் போய்விட்டனவோ!' என்று கண்டோர்கள் சந்தேகிக்கும்படிநாங்

கள் சோர்ந்து விழுந்தோம்; இவ்வாறு நெடுநேரம் விழுந்து கிடந்தோம். அதன் பின்னர் எங்களுக்குச் சிறிது உணர்ச்சி வந்தது. மாலைப் பொழுது வந்ததும், எவ்வளவு மனவுறுதியுடையவர்களும் கண்டவுடன் அஞ்சத் தக்க கோரவுருவம் உடைய ஒருவன் அவ் வறைகளில் ஒன்றைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். அவன் பனை மரம்போல் மிக்க உயரமுடையவனாகவும், கொள்ளிக் கட்டையைப்போல் கரு நிறம் பொருந்தியவனாகவும் இருந்தான். அவன் தலை மயிர் நெருப்பைப்போற் செந்நிறமுடையதாக இருந்தது. அவனுக்குக் கண் ஒன்றே இருந்தது. அதுவும் நடு நெற்றியிலிருந்தது. அது நெருப்புப் பந்துபோல ஒளிர்ந்தது. அவனுடைய முன் பற்கள் வாய்க்குள் அடங்காமல் வெளிப்பட்டு நீண்டு கூர்மையாய் இருந்தன. அவனுடைய வாய் குதிரை வாய்போல நீண்டிருந்தது. அவனுடைய உதடுகள் மார்பு வரையினுந் தொங்கிக்கொண்டிருந்தன. அவனுடைய காதுகள் யானையின் காதுகள் போலப் பெரியனவாய்த் தோள்களோடு உறவாடிக்கொண்டிருந்தன. அவனுடைய கைகளின் நகங்கள் பெரிய பறவையின் கால்களின் நகங்களைப்போல வளைந்திருந்தன. இவ்விதக் கோர உருவினையுடைய அந்த அரக்கன் தாழ்வாரத்தில் உட்கார்ந்து எங்களை உற்று நோக்கினன். அவன் அவ்வாறு எங்களைச் செவ்வையாகப் பார்த்துவிட்டுப் பிறகு எங்கள் அருகில் வந்து, என்னைப் பிடரியைப் பிடித்தெடுத்துக் கசாயியானவன் ஆட்டின் தலையைப் பார்ப்பது போலத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்; என்னுடம்பு சதைப்

பற்றில்லாமல் எலும்பும் தோலுமாய் இருத்தலைக் கண்டு, என்னைக் கீழே விட்டுவிட்டு மற்றவர்களையும் அப்படியே ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டு போனான். ஈற்றில் எங்கள் மாலுமியை எடுத்துப் பார்த்தான். அவன் பருத்தவனாகவும் சதைப்பற்றுடையவனாகவும் இருக்கக் கண்டு, அவனை முன் சொன்ன இரும்புக் கம்பிகளுள் ஒன்றில் குத்திப் பெருந்தீயை மூட்டிச் சுட்டு, அன்றிராச் சாப்பாடாகத் தின்றான். அவனது செய்கையைக் கண்டபோது நாங்கள் அடைந்த அச்சத்தையும், துயரத்தையும் என்னென்று சொல்வேன்! பிறகு அவன் தாழ்வாரத்திற் சென்று படுத்துக்கொண்டு மேகம் முழங்குவதுபோற் குறட்டைவிட்டுத் தூங்கினான். இந்த நிலையில் எங்களுக்குத் தூக்கம் வருமோ? நாங்கள் உடல் நடுக்கத்தோடும், பெருந்திகிலோடும் அன்றிரவைக் கழித்தோம். பொழுது விடிந்தவுடன் அவ்வரக்கன் அம்மாளிகையை விட்டு வெளியிற் சென்றான்.

“நாங்கள் அன்றிரவெல்லாம்அச்சத்தினால் மூடப்பட்டிருந்த எங்கள் வாய்களைத் திறந்து, ஒருவரோடொருவர் பேசத்தொடங்கினோம். எங்களில் ஒருவன், ‘ஐயோ! இவ்வரக்கன் கையால் இவ்வாறு சித்திரவதைப்பட்டு இறப்பதினின்று தப்புதற்குரிய வழியைத் தேடவேண்டும்,’ என்றான். நான், ‘நண்பர்களே, நாம் இவ்விடத்தை விட்டுக் கடற்கரைக்குப் போயிருப்போம்; அங்கு ஏதேனும் கப்பல் வந்தால், அதில் ஏறிக்கொண்டு போய்விடுவோம்,’ என்றேன். அதற்கு அனைவரும் சம்மதித்தனர்.

"நாங்கள் உடனே புறப்பட்டு வழியிற் கிடைத்த பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டு சென்று கடற்கரையை அடைந்து, ஏதேனுங் கப்பல் வருமா என்று கடலை நோக்கிக்கொண்டிருந்தோம். சூரியன் மறையுந் தருணத்தில் அவ்வரக்கன் எப்படியோ நாங்கள் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டு வந்து, இடையன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு போவது போலத் தன் கைகளை நீட்டி அதட்டி எங்களைத் தன் அரண்மனைக்குக் கொண்டு போனான்; பிறகு அன்று இரவிலும் எங்களுள் ஒருவனை முன்போலவே கொன்று தின்று குறட்டைவிட்டுத் தூங்கினான். மறு நாட் காலையில் அவன் முன்னாள் போலவே எழுந்து போய்விட்டான். அவன் போன சிறிதுநேரம் கழித்து நான் மற்றவர்களை நோக்கி, 'நண்பர்களே, நாம் தினம் ஒருவராய் இக்கொடியனுக்கு இரையாய்க்கொண்டு வருகின்றோம். இப்படி இவ்வரக்கனுக்கு இரையாய்ப் போவதைவிட நம்முயிரைக் காத்துக்கொள்வதற்கு ஏதேனும் ஒருபாயத்தைச் செய்து, அதனால் இறந்து போனாலும் அது நலமாகுமல்லவா?' என, மற்றவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். பிறகு எங்களுக்குள்யோசித்து ஓர்ஏற்பாடுசெய்துகொண்டோம். மாலைப் பொழுதானவுடன் அவ்வரக்கன் வந்து எங்களுள் மற்றொருவனைக் கொன்றுதின்று நன்றாய்க் குறட்டைவிட்டுத் தூங்கினான்.

"நாங்கள் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி நானும் மற்றொருவனும் அவ்வரக்கன் அவ்வாறு தூங்குந் தருணத்தில் இரண்டு இரும்புக் கம்பிகளைப்

பழுக்கக் காய்ச்சி எடுத்துக்கொண்டு அவனிடம் மெல்லச் சென்று, அவனது தலைப்பக்கத்தில் பக்கத்துக்கொருவராக நின்று, அவனது ஒற்றைக் கண்ணில் நன்ருய்ச் செருகிவிட்டோம். அவன் அதனல் உண்டான நோவின் மிகுதியினுற் கோவென்றலறி மிக்க கோபத்துடன் எங்களைப் பிடிக்கத் தடவினன். நாங்கள் அவன் கைக்கு அகப்படாமல் ஓடிப்போனேம். அவன் அங்கு எங்களைக் கையால் தடவித் தேடிப் பார்த்து, நாங்கள் அகப்படாமையால் கதறிக்கொண்டே அரண்மனையை விட்டு வெளியிற் போய்விட்டான்.

"பிறகு நாங்கள் கடற்கரைக்குச் சென்று அங்குக் கிடைத்த மரங்களைக்கொண்டு சில தெப்பங்கள் கட்டி அவற்றை நீரின் அருகில் தள்ளி வைத்துக் காலையில் அவற்றில் ஏறிக்கொண்டு போய்விடலாம் என்று எண்ணிக் கடற்கரையில் விடியற்காலத்தை எதிர் நோக்கிக் கொண்டு தங்கியிருந்தோம். பொழுது விடியுஞ் சமயத்தில் அக்கொடிய அரக்கனது இடிபோன்ற குரல் கேட்டது. உடனே நாங்கள் சென்று அந்தத் தெப்பங்களை நீரிலே தள்ளி, ஒவ்வொரு தெப்பத்திலும் மும்மூன்று பேராக ஏறிக்கொண்டு அவற்றைக் கடலில் விரைவாகத் தள்ளிச் செலுத்திக்கொண்டிருந்தோம். அப்போது எங்கள் பகையாளியாகிய அவ்வரக்கன், தன்னைப் போன்ற இரண்டரக்கர்கள் தன்னிரு கைகளையும் பற்றிக்கொண்டு வரவும், மற்றும் பலர் திரளாகப் பின் தொடர்ந்து வரவும் இடியிடிப்பதுபோலக் கதறிக் கொண்டு, மிக்க சினத்துடன் வருதலைக் கண்டோம். அவர்களைக் கண்டவுடன் நாங்கள் எங்கள் தெப்பங்

களை மிக விரைவாகச் செலுத்தினோம். அவ்வரக்கர்கள் பெருங்கற்கள் பல எடுத்துக்கொண்டு வந்து எங்கள் தெப்பங்கள்மீது வீசி எறிந்தார்கள். நான் ஏறிக் கொண்டிருந்த தெப்பம் தவிர மற்றத் தெப்பங்கள் எல் லாங் கடலில் மூழ்கிவிட்டன. நாங்கள் மூவரும் எங்கள் தெப்பத்தை எங்கள் பலங்கொண்ட மட்டும் விரைவா கத் தள்ளிச் செலுத்தினோம். காற்றும் எங்களுக்கு அநுகூலமாக வீசியது. ஆதலால், எங்கள் தெப்பம் அக்கொடியவர்கள் கைக்ககப்படாமல் நடுக்கடலுக்கு வந்துவிட்டது. அங்கு அலையும் காற்றும் அதிகமாக வீசிக்கொண்டிருந்தன. ஆதலால், நாங்கள் எங்கள் உயி ரில் நம்பிக்கையற்றவர்களாய் அன்றிரவையும், பகலை யும் கடலிற்கழித்தோம்.

"மறுநாட் காலையில் எங்கள் தெப்பம் ஒரு சிறு தீவின் கரையை அடைந்தது. அதனைக் கண்டவுடன் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. நாங்கள் அந்தத் தீவில் இறங்கிச் சில கனிகளைப் பறித்துத் தின் றோம். அதனால், எங்கள் களைப்பு நீங்கியது. பிறகு நாங்கள் அந்தக் கரையில் படுத்துக்கொண்டு மாலைவரை யிலும் நன்றாய்த் தூங்கினோம். மாலைப்பொழுது வந்த போது பனை மரம்போல நீண்டு பருத்த பாம்புகள் நகர்ந்து வரலாயின. அவை நகர்ந்து வருகையில் அவற் றின் பிரால்கள் கிறிச்சுக் கிறிச்சு என்று ஒலிக்கும் ஒலியைக்கேட்டு விழித்துக்கொண்டோம். அவைகளில் ஒன்று எங்களுள் ஒருவனைத் தன் வாயாற் கவ்விப் பற்றிக்கொண்டது. அவன் அதன் வாயினின்று தப்பும் பொருட்டுத் தன்னால் ஆனவரையிலும் முயன்றான்.

அஃது அவனை விடாமல் உதறிஉதறித் தரையில்மோதி அவன் எலும்புகள் நடநடவென முறியும்படி நசுக்கி விழுங்கிவிட்டது. அதனைக் கண்டு நானும் மற்றவனும் மிகவும் தூரத்தில் ஓடிப்போனோம்; மிக்க அச்சத்துடன் ஓரிடத்தில் தங்கி அன்றிரவைக் கழித்தோம்; மறுநாட் காலையில் சில கனிகளைப் பறித்துத் தின்றோம். அன்றைப் பகற் பொழுதைச் சிறிதும் உறங்காமல் அங்குக் கழித்தோம்; அன்று மாலைப் பொழுது வந்தவுடன் அப்பாம்பு சிறிது தூரத்தில் வருதலைக் கண்டோம். அதனைக் கண்டவுடன் எங்கள் உடல்கள் நடுங்கின. 'ஆ! தெய்வமே! அத்தீவில் அக்கொடிய அரக்கனுடைய கையினின்றும் தப்பினோம்; பிறகு நடுக் கடலில் மலைகள்போல வீசின அலைகளையுங் கடந்து வந்தோம். நாங்கள் அவ்வாறு அந்தப் பெரிய ஆபத்துகளினின்று தப்பிப் பிழைத்தது இக்கொடிய பாம்புகளுக்கு இரையாகும் பொருட்டுத்தானோ! எங்கள் இறைவனே! இப்பொழுது எங்களை இக்கொடிய பாம்புகளுக்கு இரையாக்காமல் காத்தருளாயோ?' என்று கதறி அழுதுகொண்டோடிச் சிறிது தூரத்திலிருந்த ஒரு பெரிய மரத்தில் ஏறிக்கொண்டோம். சிறிது நேரத்திற்குப்பின் அக்கொடிய அரவம் நாங்கள் இருந்த மரத்தினடியில் வந்து சேர்ந்தது. அப்போது நான் மிகவும் உயரத்தில் இருந்த கிளையில் உட்கார்ந்திருந்தேன். என் தோழன் அக்கிளைக்குக் கீழிருந்த கிளையில் உட்கார்ந்திருந்தான். அக்கொடிய பாம்பு சீறி எழும்பி அவனைப் பற்றி முன்போலக் கொன்று விழுங்கிவிட்டுப் போய்விட்டது.

"நான் என் தோழனுக்கு நேர்ந்த கொடிய துன்பத்தை எண்ணி எண்ணி வருந்தினேன். பிறகு, 'நாளைத் தினம் நாமும் உயிருடன் இருந்தால்இக்கொடியபாம்பு நம்மையும் கொன்று விழுங்கிவிடும். இக்கொடிய பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்டு கொடுந்துன்பம் அடைந்து உயிர் விடுவதினும் கடலில் விழுந்து உயிர் துறப்பது நலமாம்,' என்று எண்ணி, பொழுதுவிடியும் வரையில் அம்மரத்தில் தங்கியிருந்தேன். பொழுது விடிந்தவுடன் இரவு நான் எண்ணினபடி உயிர் துறப்பதற்குக் கடற்கரைக்கு ஓடினேன். ஆனால், கடற்கரைக்குப் போனபிறகு அவ்வெண்ணம்மாறிவிட்டது. 'எல்லாவுயிர்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல கடவுளுக்குச் சித்தம் இருந்தால், இக்கொடுந்துன்பத்தினின்று நம்மைக் காத்தல் கூடும். ஆகையால், கடவுளின் அருளை எண்ணி நம்முயிரைக் காத்தற்கு ஏதேனும் உபாயத்தைச்செய்தலே தகுதியாகும்,' என்றெண்ணிச் சிறியனவும் பெரியனவுமாகிய கட்டைகளையும், மிலாறுகளையும் பலவகையாகிய முட்களையுஞ் சேர்த்துத்திண்டு திண்டாகக் கட்டி, நான் இருந்த மரத்தைச் சூழப் போட்டு, நான் அந்த முட்கோட்டையின் இடையில் உட்காரும் இடத்திற்கு மேலாக முட்களுடன் உள்ள அத்திண்டுகளை நன்றாய்ச் சேர்த்துக் கட்டினேன். பிறகு பல வகையாகிய கனிகளைப் பறித்துத் தின்று, அங்குள்ள ஓடையின்நீரை அருந்திப் பகற்பொழுதைப் போக்கினேன். மாலைப் பொழுது வருவதற்கு முன் அந்த முட்கோட்டைக்குச் சென்று புகுந்துகொண்டு, கடவுளின் திருவடிகளைத் துதித்துக்கொண்டிருந்தேன்.

மாலைப் பொழுதானவுடன் அக்கொடிய பாம்பு வந்து அந்தமுட்கோட்டையைக் கடந்துவரக்கூடாமையினால், ஒரு சேமமான வளையிற் சென்று புகுந்துகொண்ட எலிக்காக வீணாகக் காத்துக்கொண்டிருக்கும் பூனையைப்போலக் காத்துக்கொண்டிருந்து, பொழுது விடிந்தவுடன் போய்விட்டது.

"நான் பொழுது நன்றாய் விடியும் வரை அந்த முட்கோட்டையில் தங்கியிருந்தேன். பிறகு அதினின்று வெளிவந்து அப்பாம்பினால் அடைந்த துன்பத்தினால், 'இனிக் கடலில் விழுந்து இறப்பதே நலம்,' என்றெண்ணிக் கடலுக்கு ஓடினேன். அப்போது கடவுளருளால் சிறிது தூரத்தில் ஒரு கப்பல் வருவதைக் கண்டேன். உடனே நான் என்னால் எவ்வளவு உரக்கக் கூவுதல் கூடுமோ அவ்வளவு உரக்கக் கூவி என் பாகைத் துணியை விரித்துப் பல முறை வீசினேன். அக்கப்பலில் இருந்தவர்கள் என்னைக் கண்டு அருகில் கப்பலைக் கொண்டு வந்து என்னை ஏற்றிக்கொண்டார்கள். சிலர் நான் மிக்க களைப்புற்றிருப்பதை அறிந்து, எனக்குச் சில இனிய தின்பண்டங்களைத் தந்தனர். நான் அவற்றை உண்டு களைப்பாறினேன். பிறகு அவர்கள் என்னை நோக்கி, 'நீ எப்படி இத்தீவுக்கு வந்தாய்?' என்று கேட்டார்கள். நான் என் வரலாறு முழுமையும் அவர்களுக்குக் கூறினேன். அவர்களில் ஒரு முதியவர் என்னை நோக்கி, 'ஆம், அப்பா, நீ கண்ட பாம்புகளே அன்றி, இத்தீவில் மனிதர்களைக் கொன்று தின்னுங் கொடிய அரக்கர்களும் இருக்கின்றார்கள் என்று நான் பலமுறையுங் கேள்விப்பட்டிருக்கிறேன்; இத்தகைய

கொடிய தீவிலிருந்து கடவுளருளாலேதான் நீ உயிர் தப்பி வந்தாய்; உனக்கு நல முண்டாகுக,' என்று கூறினர். நான் அவர்கள் அனைவருக்கும் என் வந்தனத்தைச் செலுத்தினேன். அக்கப்பல் தலைவன் என் ஆடைகள் கந்தலாய் இருப்பதைக் கண்டு, எனக்குச் சில நல்ல ஆடைகளை அளித்தான்.

"பிறகு, அக்கப்பலிலிருந்த வர்த்தகர்கள் பல தீவுகளிலும் இறங்கித்தங்கள் சரக்குகளை விற்றுக்கொண்டு வந்தார்கள். கடைசியாக அக்கப்பல் சாலாப்து என்னுந் தீவை அடைந்தது. அத்தீவில் விற்கும் பொருட்டு அவ்வணிகர்கள் தங்கள் தங்கள் சரக்குகளை இறக்கினர்கள். அப்போது அக்கப்பல் தலைவன் என்னிடம் வந்து என்னை நோக்கி, 'நண்பரே, சில நாட்களுக்குமுன் என் கப்பலில் ஏறி வந்த ஒரு வணிகர் இறந்துவிட்டார். அவருடைய சரக்குகள் என்னிடம் இருக்கின்றன. அவற்றை விற்று வருந் தொகையை அவருடைய உறவினருக்குக் கொடுத்துவிட எண்ணி இருக்கின்றேன்; அவற்றுள் ஒரு பகுதியை விற்றிருக்கின்றேன்; மற்றச் சரக்குகளை உம்மிடம் ஒப்புவிக்கின்றேன். அவற்றை நீர் பத்திரமாகக் காத்துத் தக்க விலைக்கு விற்பீரானல் அவற்றால் வரும் இலாபம் உமக்குக் கிடைக்கும்,' என்று கூறி, அச்சரக்குகளை என்னிடம் ஒப்புவித்தான். நான் அக்கப்பல் தலைவனுக்கு வந்தனஞ் செலுத்தி, 'சோம்பலாகக் காலத்தைக் கழிக்காதபடி இங்கு எனக்கொரு வேலை கிடைத்ததே!' என்று களிப்படைந்தேன். அக்கப்பலிலுள்ள தலைமைக் கணக்கன், 'அவரவர்களின்

சரக்குகளை அவரவர்களின் பெயரால் எழுதிக்கொண்டான். பிறகு அவன் அக்கப்பல் தலைவனை நோக்கி என்னைச் சுட்டி, 'ஐயா, தாம் இவரிடம் ஒப்புவித்த சரக்குகளை யார் பேரால் எழுதல் வேண்டும்?' என்று கேட்டான். கப்பல் தலைவன், 'கப்பற்காரராகிய சிந்துபாத்து என்பவரது பெயரால் எழுதிக்கொள்ளும்,' என்றான்.

"அதனைக் கேட்டவுடன் என் மனம் மிக்க கலக்கமடைந்தது. அதனால், அக்கப்பல் தலைவனை உற்று நோக்க, நான் இரண்டாங் கப்பல் யாத்திரையில், கண்ட பேரண்டப் பறவையைக் கண்ட தீவில் என்னை விட்டுச் சென்ற கப்பல் மாலுமியே அவன் என்பது எனக்குத் தெரிந்தது. அப்போது என்னுருவம் மிகவும் வேறுபட்டிருந்தமையால், அவன் என்னை அறிந்துகொள்ளாததைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. ஆயினும், 'இவன் நம்மை அறிந்துகொள்ளும்படி நாம் செய்ய வேண்டும்,' என்று எண்ணினேன். ஆதலின், அக்கப்பல் தலைவனை நோக்கி, 'நண்பரே, முன்னே யாரோ ஒரு வர்த்தகன் இறந்துவிட்டான் என்று சொன்னீரே! அந்த வர்த்தகன் பெயர் யாது?' என்று கேட்டேன். அம்மாலுமி, 'அவர் பெயர்தான் சிந்துபாத்து என்பது,' என்றான்.

"நான், 'நண்பரே, அந்த வணிகன் எப்படி இறந்து போனான்?' என்றேன்.

"அம்மாலுமி, 'ஐயா, முன்னொரு முறை சிந்துபாத்து என்னும் அவ்வணிகரும், மற்றுஞ் சில வியாபாரிகளும் என் கப்பலில் வந்தார்கள்.

அவர்கள் ஒரு தீவிலே இறங்கினார்கள். சிறிது நேரம் பொறுத்து அவ்வணிகர்கள் கப்பலில்வந்து ஏறினார்கள். அனைவரும் வந்துவிட்டனர் என்று எண்ணி, நான் கப்பலைச் செலுத்தினேன். நெடுந்தூரஞ் சென்ற பிறகு சிந்துபாத்து என்னும் வணிகர் கப்பலில் வந்து ஏற வில்லை என்பது தெரிந்தது. அதனால், மிகவும் வருந்திக் 'கப்பலை அத்தீவுக்குச் செலுத்திக்கொண்டுபோய் அவ் வணிகரை ஏற்றிக்கொண்டு வருதலே நலமாம்,' என்று மற்ற வணிகர்களிடங் கூறினேன். அவர்கள் 'இப்போது காற்று அதற்கு மாறாக வீசுகின்றது; ஆதலின், கப்பலை அங்குச் செலுத்துவது ஆபத்தை நாமே தேடிக் கொள்ளும் செயலாகும்,' என்று கூறி மறுத்தார்கள். காற்று அநுகூலமாயில்லாமையால், நான் அவர்கள் சொல்லை மறுத்தற்கஞ்சி, அப்பொழுது அவர்கள் செல்லக் கருதிய இடத்திற்குக் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய் விட்டேன். சிந்துபாத்து வணிகர் தங்கிவிட்ட தீவு மனிதர்களின் சஞ்சாரமில்லாதது; அன்றியும் கொடியனவாகிய பாம்புகளும், கழுகு முதலிய பெரிய பறவைகளும், விலங்குகளும் உறையும் இடமாகையால் அவர் இதுவரையிலும் பிழைத்திருப் பார் என்று நினைப்பதற்கு இடமில்லை. அவர் இறந்து போயிருப்பார் என்பதில் ஐயம் இல்லை,' என்று கூறினான்.

"நான் அம்மாலுமியை நோக்கி, 'நண்பரே, கொடுமை மிக்க பாம்புகளும் அரக்கர்களும் வசிக்குங் கொடியதொரு தீவிலிருந்து நான் உங்கள் அருளால் உயிர் தப்பியதுபோல அவனும் பிறர் உதவியால் உயிர்

தப்பி எங்கேனும் சென்றிருக்கலாம் என்று ஏன் எண்ணக்கூடாது?' என்றேன்.

"அவ்வாறு நான் சொல்லியதைக் கேட்ட மாலுமி என்னை நன்றாய் உற்றுநோக்கி, நான்தான் சிந்துபாத்து என்பதை அறிந்து, கட்டித் தழுவிக்கொண்டு, 'நண்பரே, உம்முடைய உருவம் மிகவும் மாறியிருப்பதனால் இது வரையிலும் உம்மை நான் அறிந்துகொள்ளாமலிருந்தேன். கடவுளருளால் கொடிய ஆபத்துகளினின்று நீர் தப்பி வந்திருக்கின்றீர். அப்பெருந்துன்பங்களினின்று உம்மைக் காத்தருளிய கடவுளின் திருவருள் வாழ்க,' என்று கூறி என் சரக்குகளையும் என் சரக்குகளில் ஒரு பகுதியை விற்ற பணத்தையும் என்னிடம் ஒப்புவித்தனன். நான் கப்பல்தலைவனுக்கு மனமகிழ்ச்சியோடு வந்தனமளித்து, அப்பணத்தில் ஒரு பகுதியை, 'நண்பரே, இதனை மறக்காமல் பெற்றுக் கொள்ளும்,' என்று கூறிக் கொடுத்தேன். அந்நற்குணமுடைய கப்பல் தலைவன் என் சொல்லை மறக்காமல் அவ்வாறே அப்பணத்தைப் பெற்றுக்கொண்டனன்.

"பிறகு நானும், மற்ற வணிகர்களும் அத்தீவில் இறங்கி எங்கள் சரக்குகளிற் சிலவற்றை விற்று மற்றச் சரக்குகளோடு கப்பலில் வந்து ஏறிக்கொண்டோம். கப்பல் மற்றொரு தீவை அடைந்தது. அத்தீவில் நான் இலவங்கம், இலவங்கப்பட்டை முதலிய சரக்குகளை வாங்கிக்கொண்டேன். மற்ற வணிகர்கள் தங்கள் சரக்குகளை அங்கு விற்றார்கள். பிறகு நாங்கள் அனைவரும் கப்பலில் ஏறிக்கொண்டோம். கப்பல் பால்சோரா

நாட்டை வந்தடைந்தது. நான் அங்கு ஏழைகளுக்குப் பல தானங்களைப் புரிந்து இங்கு வந்து சேர்ந்தேன்."

சிந்துபாத்து இவ்வாறு தன் மூன்றாங் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கூறி முடித்து, இந்துபாத்துக்கு நூறு வராகன்கள் அடங்கிய பையை அளித்து, அனைவரையும் மறுநாளைக்கு வந்து தன் நான்காம் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கேட்கும்படி வேண்டிக்கொண்டான்.

நான்காங் கப்பல் யாத்திரை

மறு நாள் அவ்வாறே இந்துபாத்து முதலியவர்கள் சிந்துபாத்தின் வீட்டிற்கு வந்தார்கள். சிந்துபாத்து அவர்களோடு உண்டபின் அளவளாவியிருந்து, தன்னுடைய நண்பர்களை நோக்கி, அடியில் வருமாறு தன்னுடைய நான்காங் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கூறலானான்:

"நண்பர்களே, நான் மூன்றும் முறை கப்பல் யாத்திரை செய்த பிறகு என் சுற்றத்தவர்களுடனும் நண்பர்களுடனுங் கூடியிருந்து, சுகமாகக் காலத்தைக் கழித்து வந்தேன். சிறிது காலஞ் சென்ற பின்பு பொருளாசையும், புதிய தீவுகளையும் மனிதர்களையும் பார்க்க வேண்டும் என்னும் ஆவலும், கப்பல் யாத்திரையில் எனக்குள்ள விருப்பமும் முன் நான்பட்ட கஷ்டங்களையெல்லாம் மறக்கச் செய்து, மீண்டும் கப்பல் யாத்திரை செய்யும்படி என்னைத் தூண்டிவிட்டன.

"ஆகையால், மீண்டும் வியாபாரத்துக்கு வேண்டிய சரக்குகளையெல்லாம் சேகரித்துக்கொண்டு பால்சோரா நாட்டை அடைந்தேன். அங்கு முன்போலவே பல வர்த்தகர்கள் கப்பலேறுவதற்குவந்திருந்தார்கள். அங்கு அப்பொழுது சித்தமாயிருந்த கப்பலில் அவ்வணிகர்களோடு ஏறிக்கொண்டேன். கப்பலில் சரக்குகள் யாவும் தக்க இடங்களில் வைக்கப்பட்டன. கப்பல் புறப்பட்டுப் பாரிசு தேசத்தின் வழியாகப் போய்ப் பலதீவுகளைக் கடந்து ஒரு தீவை அடைந்தது. அந்தத் தீவில் நானும்

மற்ற வர்த்தகர்களும் இறங்கிச் சில சரக்குகளை விற்று, மீண்டும் கப்பலை வந்தடைந்தோம்.

"கப்பல் மீண்டும் புறப்பட்டுச் செல்கையில் ஒரு பெருஞ்சுழற்காற்றில் அகப்பட்டுக்கொண்டது. கப்பல் தலைவன் கப்பற் பாய்களைச் சுருட்டிவிட்டு எங்களுக்கு அந்த அபாயத்தைத் தெரிவித்தான். நாங்கள் அதினின்று தப்புதற்கு வேண்டிய உபாயங்களை முயன்று செய்தோம். எங்கள் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. கப்பலின் பாய் துண்டு துண்டாய்ச் சிதைந்துவிட்டது. கப்பலும் கரை தட்டி உடைந்துவிட்டது. கப்பல் வேலைக்காரர்களிற் பலர் இறந்துவிட்டனர். வணிகர்களிலுஞ் சிலர் இறந்து போயினர். நானும், மற்ற வணிகர்களும், கப்பல் வேலைக்காரர்களிற் சிலரும் ஒரு மரத்துண்டைப் பிடித்துக்கொண்டோம். காற்றானது எங்களை அடித்துக் கொண்டுபோய் அடுத்திருந்த ஒரு பரந்த தீவிற் சேர்த்தது. நாங்கள் அத்தீவின் கரையிலேறி, அங்கிருந்த சில கனிந்த பழங்களைத் தின்று, களைப்பாறினோம்; எங்களுக்கு நேர்ந்த அத்துன்பத்தை எண்ணி வருந்தினோம். எங்கள் தைரியம் நீங்கியது. நாங்கள் இனிப் பிழைப்போம் என்னும் ஆசையை விட்டுவிட்டோம்; அன்றிராமுழுதும் அந்தஇடத்திலே தங்கியிருந்தோம்; மறு நாள் சூரியன் உதித்தவுடன் அத்துறையை விட்டு, அத்தீவினுட்சென்றோம்; சிறிது தூரம் சென்றபின் ஓரிடத்திற் சில வீடுகளைக் கண்டோம். நாங்கள் அவ் வீடுகளைக் கடந்து செல்லுகையில் பல காப்பிரிகள் வந்து எங்களைச் சூழ்ந்துகொண்டு ஆடுகளைப் பங்கிட்டுக்கொள்

வது போல எங்களைப் பங்கிட்டுப் பிரித்துக்கொண்டு, அவரவர்கள் பங்கானவர்களை அவரவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

"என்னையும், என்னோடு மற்றும் ஐந்து பேரையும் தங்கள் பங்காகக் கொண்ட காப்பிரிகள் வீட்டுக்குப் போனவுடன் ஏதோ ஒரு வகையான பூண்டைக் கொண்டுவந்து எங்களுக்குக் கொடுத்து, அதைத் தின்னும்படி குறிப்புக் காட்டினார்கள். நான், 'இது நம்மைக் கொல்லுதற்குச் செய்யும் ஓர் உபாயமாகும்,' என்றனுமானித்தறிந்துகொண்டு, தின்னமலிருந்துவிட்டேன். மற்ற ஐந்து பேர்களும் பசியின் மிகுதியினால் ஒன்றையும் யோசிக்காமல் அதனைத் தின்றுவிட்டார்கள். அதனால் அவர்கள் அறிவிழந்து ஒன்றுமுணராதிருந்தார்கள். பிறகு அக்காப்பிரிகள் தேங்காய் எண்ணெயை விட்டு எங்களுக்குச் சோறு போட்டார்கள். அச்சோற்றில் நான் சிறிது தின்றேன். என் தோழர்கள் அச்சோற்றை நன்றாய்த் தின்றார்கள். அக்காப்பிரிகள் எங்களை நன்றாகக் கொழுக்கவைத்துக் கொன்று தின்னவே அப்படிச் செய்தார்கள் போலும்! என் தோழர்கள் அக்காப்பிரிகள் இடுஞ்சோறு முதலியவற்றை நன்றாய்த் தின்று உடலில் கொழுப்பேறப் பெற்றதோடு அறிவுமிழந்திருந்தார்கள். அக்காப்பிரிகள் ஒரு நாள் என் தோழர்களில் ஒருவனை அவ்வாறேகொன்றுதின்றுவிட்டார்கள். நான் அதனைக் கண்டபின், 'நாம் இக்காப்பிரிகளின் கையாற்சாகப்போகின்றோமே!' என்று ஏக்கங் கொண்டேன். அந்த ஏக்கமானது என் சாப்பாட்டை நீக்கிவிட்டது. அதனால், என் உடம்பு நாளுக்குநாள்

மிகவும் இளைத்து வந்தது. அதுவே எனக்கு நன்மை ஆயிற்று. என் உடம்பு மிகவும் இளைத்திருந்தபடியால் அக்காப்பிரிகள்என்னிடம் வாராமல் மற்றநால்வரையும் கொன்று தின்றுவிட்டார்கள். நான் எங்குச் சென்றாலும் என்னை அக்காப்பிரிகள் தடுப்பதில்லை. அன்றியும் அவர்கள் பகற்காலங்களில் வீட்டை விட்டு வெளியிற் சென்றிருப்பார்கள். மாலைப்போதான பிறகுதான் வீட்டுக்கு வருவார்கள். நான் அந்தச் சமயத்தைக் கண்டு அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டேன். அப்போது மிகவும் வயது முதிர்ந்தவனாகிய ஒரு கிழவன், ஓவென்று கூவினான். நான் அதனைப் பொருட்படுத்தாமல் விரைந்து நடந்து,அவன் கண்ணுக்கு மறைவாகப் போய் விட்டேன்.

"பிறகு நான், 'இனி நம்மை ஒருவனும்தொடர்ந்து வரமாட்டான்,' என்று உறுதி கொண்டு, என் கையில் மறைத்து வைத்திருந்த தின்பண்டங்களைத் தின்று, மீண்டும் ஓரிடத்திலுந் தங்காமல் நடக்கத் தொடங்கினேன். நான் சென்ற வழியில் தென்னமரங்கள் மிகுதியாக இருந்தன. ஆகையால், எனக்குப் பசியுண்டான போது தேங்காய்களையே உணவாகக் கொண்டு, ஏழு நாள் நடந்துசென்றேன். உயிரைக்காத்துக்கொள்வதில் எனக்குண்டான ஆசையினால் அந்நெடுந்தூர நடையில் வருத்தம்எனக்குத்தோன்றாதாயிற்று. எட்டாம் நாளில் ஓரிடத்தில் என்னைப் போன்ற வெள்ளை மூஞ்சியை உடைய பல மனிதர்கள் மிளகு பொறுக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே எனக்குப் பெருமகிழ்ச்சியுண்டாயிற்று. என் உயிரை அவ்வாறு காத்

தருளிய கடவுளுக்கு என் அன்போடு கூடிய வந்தனத்தைச் செலுத்தி, அவர்கள் அருகிற் சென்றேன்.

"அவர்கள் என்னைக்கண்டு அராபி பாஷையில், 'உன் ஊர் எது? உன் பெயர் என்ன? நீ இங்கு எப்படி வந்தாய்?' என்று கேட்டார்கள். அவர்கள் நமது பாஷையாகிய அரபி பாஷையில் பேசியதனால் நான் களிப்புற்று அவர்களுக்கு என் வரலாற்றைக் கூறினேன். அவர்கள் என் வரலாற்றைக் கேட்டு வியப்படைந்து, என்னை நோக்கி, 'நண்பரே, நீர் கடவுளருளாலேதான் அக்காப்பிரிகளின் கையினின்று தப்பி வந்தீர். அவர்கள் மிகவும் கொடியவர்கள்; மனிதர்களைக் கொன்று தின்பவர்கள். இரக்கம் என்பதையே அவர்கள் அறியார்கள். உம்மைக் காத்தருளிய கடவுளின் திருவருள் வாழ்க,' என்று கூறி, எனக்கு இனிய தின்பண்டங்களை அளித்தார்கள். நான் அவற்றைத் தின்று களைப்பாறினேன். அவர்கள் வேண்டிய அளவு மிளகு பொறுக்கிக்கொண்டு வந்து, என்னை அழைத்துச் சென்று, கப்பல் ஏறினார்கள்.

"கப்பல் புறப்பட்டுச் சென்று அவர்களுடைய தீவை அடைந்தது. அத்தீவு மிக்க வளப்பமுடையது. அத்தீவிலுள்ள மனிதர் நாகரிகமும், நற்குணமுமுடையவர்கள். அத்தீவு சிறந்த வியாபாரம் நடக்கும் இடமாகும். என்னை அழைத்துச் சென்றவர்கள் என்னை அத்தீவின் அரசனிடங் கொண்டுபோய் விட்டார்கள். அவ்வரசன் மிக்க நற்குணமுடையவன். அவ்வேந்தன் என்னுடைய வரலாறுகளைப் பொறுமையோடு கேட்டு வியப்படைந்து, என்னிடம் மிக்க இரக்கங் கொண்டு, எனக்கு

வேண்டிய உடை உணவு முதலியவற்றை அளிக்கும்படி தன் மந்திரிகளுக்குக் கட்டளை இட்டான். அவ்வரசன் என்னிடத்தில் மிகுந்த அன்பு உடையவன் ஆனான். மற்றவர்களும் அப்படியே என்னிடம் அன்பு காட்டினார்கள். அரசனிடத்தில் நான் மிக்க மரியாதையோடு நடந்துகொண்டேன். ஆதலின், அரசன் என்பால் வைத்த அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

"இங்ஙனம் இருக்கையில் நான் எங்குங் காணாத ஓர் அதிசயச் செயலை அந்நாட்டினரிடம் கண்டேன்: அந்நாட்டினர் அங்கவடி, சேணம், கடிவாளம் ஆகிய இவையின்றியே குதிரை மீதேறிச் சவாரி செய்வார்கள். அதனைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். ஒரு நாள் அவ்வரசனோடு நான் பேசிக்கொண்டிருக்கையில், 'அன்புள்ள அரசரே, இந்நாட்டினர், அங்கவடி, சேணம், கடிவாளம் என்னும் இவைகள் இன்றியே குதிரைகளின் மீதேறிச் சவாரி செய்கின்றார்களே! சவாரி செய்பவர்கள் ஏன் அவற்றை உபயோகித்தலாகாது?' என்று கேட்டேன். அரசன், 'ஐய, நீர் கூறியவற்றை நான் என்றும் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை,' என்றான்.

"நான், 'அன்புள்ள அரசரே, அவை சவாரி செய்பவர்களுக்கு மிக்க அனுகூலஞ் செய்யும். கட்டளை இடின் முன்னே அவற்றில் ஒவ்வொன்றைச் செய்வித்துத் தருகின்றேன்,' என்றேன். அரசனும் அதற்குச் சம்மதித்தான். நான் எனக்குத் தெரிந்த அவற்றின் உருக்களை எழுதி அவற்றை ஓர் ஓவியனிடங் கொடுத்தேன். அவன் அவ்வுருவங்களைச் செம்மையாக எழுதிக்

கொடுத்தான். நான் அவற்றைக் கொண்டு போய் சிறந்த சக்கிலி ஒருவனிடங் கொடுத்து, அவற்றின் படி அங்கவடி முதலிய மூன்றிலும் ஒவ்வொன்று செய்யச் சொன்னேன். அவனும் அவ்வாறே அம் மூன்றையுஞ்செய்து தந்தனன். அவற்றுள், சேணத்தை அரசனுக்கேற்ப, பட்டாலும் சரிகைகளாலும் அலங் கரித்து, அரசனுடைய குதிரைக்கு அதனை இடுவித்து, அக்குதிரையை அரசன் முன் கொண்டுபோய் நிறுத்தி னேன். அரசன் அப்புரவியின்மீது இவர்ந்து சவாரி செய்து, அங்கவடி முதலியவற்றின் அநுகூலத்தை நன்றாய் அறிந்து, எனக்குப் பல சன்மானங்களை அளித் தான். அரசன் அவையிலுள்ளவர்கள் தங்களுக்கும் அவற்றைச் செய்வித்துத் தரும்படி என்னை வேண்டி னார்கள். நான் அவ்வாறே அவர்களுக்கும் அவற் றைச் செய்வித்துக் கொடுத்தேன். அவர்களும் எனக் குப் பல சன்மானங்களை வழங்கினார்கள். நான் மற்ற வர்களுக்கும் அவ்வாறே அவற்றைச் செய்வித்துக் கொடுத்து வந்தேன். அந்நாட்டில் அதுவே எனக்குச் சிறந்த வியாபாரமாய் ஏற்பட்டது. அதனால், எனக்கு மிக்க பொருள் கிடைத்து வந்தது. நான் அப்பட்டினத் துச் சிறந்த செல்வர்களுள் ஒருவனாய் விளங்கினேன்.

அரசனுக்கு நாளடைவில் என்னைத் தன்னாட்டிலே தானே இருத்திக்கொள்ள வேண்டும் என்னும் எண்ண முண்டாயிற்று. அதனால், அரசன் என்னை நோக்கி, 'ஐய, நீர் தனியாய் இருப்பது தகுதியன்று. ஒரு நல்ல பெண்ணை மணந்துகொண்டு வேறு எங்குஞ் செல்லா மல், இங்காட்டிலே இருக்கவேண்டும்,' என்றனன்.

நான் அரசன் சொல்லை மறுக்க அஞ்சிச் சும்மா இருந்தேன். அரசன் நான் அதற்குச் சம்மதித்துவிட்டேன் என்று எண்ணித் தன் அரண்மனையில் உள்ள கன்னியர்களுள், கற்பும், பொற்பும், குணமும், நல்ல மனமும் உடையவளாகிய ஒரு பெண்ணை எனக்கு மணம் புரிவித்தனன்.

நான் அம்மாதுடன் இன்பமாகக் காலத்தைக் கழித்து வந்தேன். இப்படி இருக்கையில் என் தோழர்களில் ஒருவனுடைய மனைவி இறந்துபோனாள். நான் அவனிடஞ் சென்று அவனுக்குத் தேறுதலாகிய பல இனிய மொழிகளைக் கூறினேன். அவன் அவற்றால் தேறுதல் அடையாமல், மேன்மேலும் அதிகமாக வருந்தினான். 'இவன் மனைவி இவன்பால் மிக்க அன்புடையவளாக இருந்திருப்பாள்; ஆகையாலேதான் இவன் அம்மங்கை நல்லாளின் பிரிவுக்கு ஆற்றாமல் இவ்வாறு வருந்துகின்றான்,' என்று எண்ணி, 'நண்பரே, உலகில் யாவரும் தத்தம் ஆயுட்காலம் முடிந்துவிட்டால் இறப்பது நிச்சயம். நாம் எவ்வளவு வருந்தினும் இறந்தவர்கள் திரும்பிவரமாட்டார்கள். அதனை நினைத்து மனத்தைத் தேற்றிக்கொள்ளாமல் நீர் இவ்வாறு வருந்துதலாகாது. இப்படியே வருந்திக் கொண்டிருப்பீராயின், உம்முடைய உடம்பு இளைத்து விடும். அன்றியும், அஃது உம்முடைய உயிருக்குங் கெடுதியை உண்டாக்கக் கூடும். ஆகையால், நீர் இனி இப்படி வருந்துதலை விட்டுவிட வேண்டும். உயிரைப் போற்ற வேண்டுவது யாவருக்கும் இன்றியமையாத கடமையாம்,' என்றேன். அத்தோழன், என்னை நோக்கி,

'நண்பரே, என்னுயிருக்கும் இறுதி உண்டாயிருப்பதை நீர் அறியாமல் இவ்வாறு கூறுகின்றீர்,' என்றனன். அதனைக் கேட்டு நான் வியப்படைந்து, 'நண்பரே, நீர் இப்படிக்கூறியதன் காரணம் யாது?' என்று கேட்டேன். அவன், 'கணவன் இறந்தால், கணவனுடன் மனைவியையும், மனைவி இறந்தால், மனைவியுடன் கணவனையும் உயிருடன் புதைத்துவிடுதல் இந்நாட்டு வழக்கம். அப்படியிருக்க, நான் எவ்வாறு என் உயிரைப் போற்றுதல் கூடும்?' என்று கூறினான். அவன் மொழியைக் கேட்டவுடன் எனக்கு மன நடுக்கம் உண்டாயிற்று. 'நாகரிகம் உடையவர்களாகிய இந்நாட்டினரிடத்தில் இக்கொடுஞ்செய்கை எவ்வாறு வந்து புகுந்தது! இதனைக் கேட்கும்போதே மனம் நடுங்குகின்றதே!' என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது சுற்றத்தினரும், நண்பர்களும், அண்டையில் இருப்பவர்களும் வந்து பிணத்தைக் கலியாணப்பெண்ணை அலங்கரிப்பதுபோல ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து, ஒரு பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு போனார்கள். அப்பெண்ணின் கணவன் அக்கூட்டத்தாருக்கு முன் சென்றான். நானும் அவர்களுடன் சென்றேன். அனைவரும் ஒரு பெரிய மலையின் அருகிற் சென்றனர். அம்மலை கடற்கரை வரையிலும் நீண்டிருந்தது.

அனைவரும் அந்த மலையின்மேல் ஏறி, ஒரு பெரிய கல்லைப் புரட்டி, அதன் கீழ் இருந்த குகையில் அப்பெட்டியைக் கயிறு கட்டி விட்டுவிட்டார்கள். பின்பு அவள் கணவன் தன் உறவினரையும், தோழர்களையும் கட்டிக்கொண்டு அழுதான். பிறகு அம்மனிதனை

யும் ஒரு பெட்டியில் வைத்துச் சிறிது நீரையும் ஆறு ரொட்டிகளையும் உடன் வைத்து, அப்பெட்டியையும் முன்போலவே கட்டி அக்குகையில் விட்டுவிட்டுப் பின் செய்தற்குரிய சடங்குகளைச் செய்து முடித்து, வீட்டுக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு அச்செயல் மிகவுஞ் சாதாரணமாக இருக்கின்றது. அதனைக் கண்டபோது எனக்கு உண்டான மன நடுக்கத்துக்கு அளவு கிடையாது. மற்றொரு முறை ஒரு புருடன் இறந்து போக அவன் மனையாட்டியையும் அவ்வாறே அவனுடன் அக் குகையில் விட்டனர். அஃது அவர்களுக்குள்ளே தொன்று தொட்டு நடந்து வருஞ் செய்கையாக இருத்தலால், அதனை அவர்கள் கொடுஞ்செய்கை எனக் கருதுவதில்லை. அஃது என்னளவில் பொறுக்க முடியாததாய் இருந்தது.

"நான் ஒரு நாள் அரசனை நோக்கி, 'அன்புடைய அரசரே, நான் அநேக தீவுகளுக்குச் சென்றிருக்கின்றேன். இவ்வாறு இறந்த மனைவியோடு உயிருடன் இருக்கும் கணவனையும்,இறந்த கணவனோடு உயிருடன் இருக்கின்ற மனைவியையும் புதைக்குஞ் செய்கையை நான் எங்குங் கண்டதே இல்லை. நீதியையுடைய தங்கள் நாட்டில் இக்கொடுமை நடப்பது தகுதியாமோ?' என்று கேட்டேன். அவ்வேந்தன், 'ஐய, இஃது இப்பொழுது உண்டானது அன்று. தொன்று தொட்டே இது நடந்து வருகின்றது. அதிகஞ் சொல்லுவதேன்? என் மனையாள் இறந்துவிடின், என்னையும் இவ்வாறே என் மனைவியோடு புதைத்துவிடுவார்கள். இதில் ஐயமில்லை.' என்று கூறினன். நான் அரசனை நோக்கி,

'அன்புள்ள அரசரே, என்மனையாள் இறப்பின் அந்நியனாகிய என்னையும் அப்படித்தான் புதைத்துவிடுவார்களோ?' என்று கேட்டேன். அரசன் புன்முறுவலோடு, 'இந்நாட்டில் மணம் புரிந்துகொண்டவர்கள் யாராயிருப்பினும் அப்படித்தான்செய்வார்கள்,' என்று கூறினான். அச்சொல் என் மனக் கவலையை அதிகப்படுத்தியது. நான் அதனை அரசனுக்குத் தோன்றாதபடி என் மனத்திலே அடக்கிக்கொண்டு, அரசன்பால் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

"அதன்பிறகு என்மனையாட்டிக்கு ஒரு சிறுநோயும் வாராதபடி மிக்க கவலையுடன் அவளைக் கவனித்து வந்தேன்; தவறி அவளுக்கு நோய் வரினும் தக்க வைத்தியர்களைக்கொண்டு மருந்துகளைக் கொடுத்து அந்நோய் நீங்கும்படி செய்வேன். அவளுக்கு நோய் வந்து நீங்கும் அளவும் எனக்குத் தூக்கம் பிடிக்காது. நான் அவ்வளவு கருத்தாய்க் கவனித்து வந்தும் ஒரு கொடிய நோய் வந்து என் மனைவியின் உயிரைக் கொள்ளை கொண்டது.

"உடனே என் நண்பர்களும் அப்பெண்ணின் உறவினர்களாகிய அரசன்முதலியவர்களும் என் அகத்தில் வந்து கூடிவிட்டார்கள். சடங்குகள் யாவும் செய்து முடிந்துவிட்டன. பிணத்தை ஆடை அணிகளால் அலங்கரித்துப் பெட்டியில் இட்டு, அதனை எடுத்துக் கொண்டு, அனைவரும் அம்மலைக்குப் புறப்பட்டனர். நான் முறைப்படி அக்கூட்டத்தின் முன் சென்றேன். மலையருகிற் போனதும், நான் அரசனிடம் போய் அரசனையும் மற்றவர்களையும் பார்த்து, 'அன்புள்ள

அரசரே, அன்புடைய நண்பர்களே, என் ஊரில் எனக்கு மனைவி மக்கள் இருக்கின்றார்கள். ஆகையால், என்னை விட்டுவிட வேண்டும்,' என்று மிகவும் மன்றாடிக் கேட்டேன். நான் எவ்வளவு கேட்டும், அவர்கள் அதற்கு உடன்படவில்லை. என் மனைவியை அக்குகையில் விட்ட பின், என்னையும் ஒரு பெட்டியில் வைத்து நீரையும் ஆறு ரொட்டிகளையும் உடன்வைத்து, அப்பெட்டியை வழக்கப்படி கயிற்றாற் கட்டி, அக்குகையில் விட்டுவிட்டார்கள்; விட்டபின் அக்குகையை மூடிவிட்டார்கள்.

"பிறகு நான் அப்பெட்டியை விட்டு வெளியில் வந்தேன். அக்குகையின் உச்சியில் ஒரு சிறு துவாரம் இருந்தது. அதன் மூலமாக அக்குகைக்குள் சிறிது வெளிச்சம் உண்டாயிருந்தது. அதனால், அக்குகை சற்றேறக்குறைய ஐம்பது கோலளவு ஆழமும், மிக்க நீளமும் அகலமும் உடையதாயிருப்பதை அறிந்தேன். அங்குப் பிணங்களின் துர் நாற்றம் வீசிற்று. அந்த நாற்றம் பொறுக்க முடியாததாயிருந்தது. ஆகையால், நான் சிறிது தூரம் சென்று, தரையில் உட்கார்ந்து கொண்டு, 'ஆ! நான் என்ன செய்வேன்! என் விதி மிகக் கொடிது! நான் ஏறி வந்த கப்பல் நடுக்கடலிலே காற்றில் அகப்பட்டுச் சிதைந்த போது என் உயிர் நீங்கியிருந்தால், அந்தோ! இப்புது வகையான மரணத்திற்கு நான் ஆளாகாமல் இருந்திருப்பேனே! நான் அறிவற்றவன்; பெண்ணாசையினாலன்றோ இத் துன்பத்தைக் கொண்டேன். நான் நிர்ப்பாக்கியனான பாவி! ஐயோ! வருந்திச் சம்பாதித்த பொருளை

வைத்துக்கொண்டு வீட்டிலே இருந்து சுகமாய் வாழாமற் போனேனே! என் சிறு மதியின் விபரீதப் போக்கே என்னை இக்கதிக்கு ஆளாக்கியது. இதைக் கருதியன்றோ, 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டா,' என்றும், 'எண்ணித் துணிக,' என்றும் முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள்? 'கடவுளே, நீ எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து அழித்து மீண்டளிப்பவனல்லையோ? நீ எங்கும் இருப்பவன் அல்லையோ? என் துயரைக் கண்டு எனக்கிரங்கி அருள் செய்யாயோ? எல்லாம் வல்லவனாகிய நீ நினைத்தால் எளியேனாகிய என்னைக் காத்தல் உனக்கருமையோ?' என்று, கோவெனக் கதறித் தலையிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு, தரையிற் சாய்ந்தேன். ஆனால், நான் தூங்காமல் இருந்தேன்.

"அப்போது எனக்கு, ஏதோ ஒன்று தள்ளாடி இங்கும் அங்கும் மோதிக்கொண்டு போவதாகக் காணப்பட்டது. நான் அதனை உற்று நோக்கினேன். அஃது என்னைக்கண்டு முக்கி முரண்டு ஓடியது. நான் அதனைப் பின் தொடர்ந்து போனேன். போகப்போக ஒரு பெரிய நக்ஷத்திரம்போல ஒரு வெளிச்சந்தோன்றியது. 'இவ்வெளிச்சம் எங்கிருந்து வருகின்றது!' என்று யோசித்தேன். அஃதொரு கற்பாறையின் வழியாக வருகின்றது என்பதை அறிந்தேன். எனக்கு முன்னே ஓடியதனைப் பின் தொடர்ந்து ஓடியதனால் உண்டான களைப்பை அங்குச் சிறிது நேரந் தங்கித் தீர்த்துக்கொண்டேன். பின்னர் அந்தக் கற்பாறையிடஞ் சென்று பார்த்தேன். அக்கற்பாறையில் ஒரு

மனிதன் தாராளமாக ஏறிப் போகக் கூடிய வழி இருக்கக் கண்டேன்; உடனே அவ்வழியாக நுழைந்து வெளியில் வந்தேன். நான் வந்த இடம் கடற்கரையாக இருக்கக் கண்டேன். ஆ! அப்பொழுது எனக்குண்டான களிப்பை என்னென்றுரைப்பேன்! ஆயினும், 'நாம் வெளியில் வந்தது உண்மைதானு, அவ்வாறு கனவு காண்கின்ருேமோ!' என்று எனக்கு ஐயம் உண்டாயிற்று. அந்தச் சந்தேகத்தை அந்த இடத்தை நிதானித்தறிந்து தீர்த்துக்கொண்டேன். அங்கு உணவுக்கு வேண்டுவது ஒன்றுங் கிடைக்காமையால், மீண்டும் அக்குகைக்குட்போய் எனக்குப் பெட்டியில் வைத்த ரொட்டிகளையும் நீரையும் கொண்டுவந்து, ஒரு ரொட்டியைத் தின்று நீரைக் குடித்தேன்.

"பிறகு மறுபடியும் அக்குகைக்குட் சென்று, மெல்லத் தடவிப் பிணப்பெட்டிகளிலுள்ள நகைகளையும் ஆடைகளையும் எடுத்து அப்பெட்டிகளைக் கட்டிவிட்ட கயிறுகளாற் கட்டி வெளியிற் கொண்டுவந்தேன். அவ்வாறே பல முறை சென்று நகைகளையும் ஆடைகளையும் கொண்டுவந்து, அவற்றைச் சில சிப்பங்களாகக் கட்டி ஓரிடத்தில் வைத்தேன். பிறகு ஏதேனும் கப்பல் வருமா என்று பார்த்துக்கொண்டிருந்தேன். அது மழை பெய்யும் காலம் அன்று. மழையில் நனைவோம் என்னும் பயமும் எனக்கில்லாமல்இருந்தது. அங்குத் தங்கியிருக்கையில் முன்னே அக்குகைக்குள் எனக்கு முன்னுகத் தட்டுத் தடுமாறி ஓடிவந்த பிராணி வழக்கமாக அக்குகைக்குட் சென்று பிணங்களைப் பிடுங்கித் தின்னும்

கூலிதான் என்பதையும் அறிந்தேன். நான் இவ்வாறு அன்றிரவை அங்குக் கழித்தேன்.

"மறு நாள் காலையில் ஒரு ரொட்டியைத் தின்று சிறிது நீரைப் பருகி, ஏதேனும் கப்பல் வருமா என்று பார்த்துக்கொண்டிருந்தேன். கடவுளருளால் ஒரு கப்பல் அவ்வழியாகச் சமீபத்தில் வருதலைக் கண்டேன். உடனே என் துணியை வீசிக் குறிப்புக் காட்டி, உரக்கக்கூவி அழைத்தேன். அக்கப்பலில் உள்ளவர்கள் அதைக் கேட்டு ஒரு படகை அனுப்பினார்கள். நான் என் மூட்டைகளோடு அப்படகில் ஏறிக்கொண்டு சென்று, கப்பலை அடைந்து, அதில் ஏறிக்கொண்டேன். அக்கப்பலில் உள்ளவர்கள் என்னைப் பார்த்து, 'நண்பரே, உமக்கிந்தத்துன்பம் எவ்வாறுண்டாயிற்று?' என்று கேட்டார்கள். நான், 'அன்புடையோர்களே, நான் ஏறி வந்த கப்பல் உடைந்துவிட்டதனால், நான் இவ்விடம் வந்தேன். நான் இவ்விடம் வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் ஆயின,' என்றேன். நான் அவ்வாறு கூறிய பொய்யுரையை அக்கப்பல்தலைவனும் மற்றவர்களும் உண்மை என்றே நம்பி, அதற்குமேல் ஒன்றும் கேட்காமல் இருந்துவிட்டார்கள். அவர்கள் மேல் ஒன்றும் கேட்காமல் இருந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. நான் அக்கப்பல் தலைவனுக்குச் சில நகைகளைக் கொடுத்தேன். அவன் அதை வேண்டா என மறுத்துவிட்டு, எனக்குப் பல உதவிகளைச் செய்தான்

"அக்கப்பல் அப்பொழுதுதான் வியாபாரத்தின் பொருட்டுப் புறப்பட்டது. ஆகையால், அக்கப்பல் பல

5

தீவுகளுக்குச் சென்றது. அக்கப்பலில் வந்த வர்த்தகர்கள் அத்தீவுகளில் தங்கள் சரக்குகளை விற்றார்கள். நான் என்னிடம் இருந்த நகைகளையும் ஆடைகளையும் விற்றேன். பிறகு கப்பலானது மீண்டு வந்து பாக்தாத்தின் துறைமுகத்தை அடைந்தது.

"நான் பெரும்பொருளோடு என் வீட்டை அடைந்து, பல எளியவர்க்கு உணவும் உடையும் அளித்துப் பின் மற்றும் பல தருமங்களைச் செய்து என் சுற்றத்தினரோடு சுகமாக வாழ்ந்து வந்தேன்."

சிந்துபாத்து இவ்வாறு தான் செய்த நான்காம் கப்பல் யாத்திரையைப்பற்றிக்கூறி, இந்துபாத்துக்கு நூறு சவரன்கள் அடங்கிய பையைக் கொடுத்தான். அனைவரும் சிந்துபாத்தினிடம் விடை பெற்றுக் கொண்டு, தங்கள் மனைக்குச் சென்றனர்.

ஐந்தாங் கப்பல் யாத்திரை

மறு நாள் இந்துபாத்து முதலியவர்கள் சிந்து பாத்தின் வீட்டிற்குவந்து உண்பன உண்டபின், சிந்து பாத்து அடியில் வரும் விதமாகத் தன் ஐந்தாவது கப்பல் யாத்திரையை அவர்களுக்குச் சொல்லலானன் :

“நண்பர்களே, நான் நான்காம் யாத்திரையில் அவ்வளவு துன்பமடைந்தும்,மீண்டும் கப்பல் யாத்திரை செய்ய என் மனம் விரும்பியது. உடனே என் சொந்தத்தில் ஒரு கப்பலைக் கட்டும்படி ஏற்பாடு செய்தேன். கப்பல் கட்டி முடிந்ததும் பல வகைச் சரக்குகளுடன் பால்சோரா நகருக்குச் சென்று கப்பல் ஏறினேன். என்னுடன் மற்றும் பல வணிகர் என் கப்பலில் ஏறினர்.

“கப்பலானது புறப்பட்டது. காற்றும் அநுகூலமாக வீசியது. கப்பல் சென்று முதலில் ஒரு தீவை அடைந்தது. அத்தீவிலே நாங்கள் இறங்கினேம்; நான் முன்னே சொன்ன கண்டபேரண்ட முட்டையைப் போன்ற ஒன்றைக் கண்டோம். மற்ற வணிகர்கள் அதை உடைத்துப் பார்க்க வேண்டும் என்ருர்கள். நான் அதனல் துன்பமுண்டாகும் என்பதை அவர்களுக்குக் கூறித் தடுத்தேன். அவர்கள் என் சொல்லை ஏற்காமல், அதனைக் கோடரியாற் பிளந்தார்கள். அதினின்று வெளிப்படுந் தருணத்தில் இருந்த குஞ்சு வெளிப்பட்டது. ஆனல், கோடரி அதன்மீதும் பட்டதனல் அஃது உயிர் நீங்கி இருந்தது. இவ்வாறு அவ்வணிகர் இச்சாகசச் செயலைச் செய்து முடிப்பதற்குள்

ஆகாயத்தில் இரண்டு பெரிய மேகங்களைப்போல், இரண்டு கண்டபேரண்டப் பறவைகள் வந்து வட்டமாய்ப்பறந்து பேரிரைச்சல் இட்டன. நான் அவற்றைக் கண்டு அவ்வணிகர்களை நோக்கி 'நண்பர்களே, விரைந்து வந்து கப்பலில் ஏறிக்கொள்ளுங்கள்; இல்லாவிடில் பெரிய ஆபத்து உண்டாகும்,' என்றேன். அவர்கள் விரைந்து வந்து கப்பலில் ஏறிக்கொண்டார்கள். என் மாலுமி அப்பறவைகளின் தன்மையை முன்னரே அறிந்திருந்தான் ஆதலால், கப்பலை விரைவாகச் செலுத்தினான். அப்பறவைகள் முட்டையின் அருகிற் சென்று, முட்டை பிளக்கப்பட்டிருத்தலையும் 'குஞ்சு உயிர் நீங்கியிருத்தலையும்பார்த்து, முன்னையினும் இரண்டு மடங்கு அதிகமாக இரைச்சலிட்டுப் பறந்து சென்றன. மாலுமி மிகவும் விரைவாகக் கப்பலை ஓட்டினான். சென்ற பறவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாறையாக இரண்டு பாறைகளைக் கால்களால் பற்றிக் கொண்டு வந்தன. அவற்றுள் ஒரு பறவை தன் கால்களால் பற்றிக்கொண்டு வந்த பாறையை எங்கள் கப்பலுக்கு நேராக வந்து போட்டது. மாலுமி மிக்க சாமர்த்தியமாகக் கப்பலைத் திருப்பினான். ஆதலால், கல் கப்பலில் விழாமல் அதன் பக்கத்தில் விழுந்தது. அக் கல்லானது விழுந்த விசையினால் பூமிதெரியும்படி நீரைப் பிளந்து மீன்களை மிதக்கச் செய்துவிட்டது. மற்றொரு கண்டபேரண்டம் அதனைக் கண்டு சினங்கொண்டு, எங்கள் கப்பலுக்கு நேராகப் பறந்து வந்து, கப்பலின் நடுவிற் போட்டது. அதனால், அந்தக் கப்பல் பல நூறு துண்டுகளாகச் சிதைக்கப்பட்டுவிட்டது.

"கப்பலில் இருந்தவர்களில் என்னை ஒழிந்த மற்றவர்கள் எல்லாரும் கடலில் அழுந்தி இறந்துவிட்டார்கள்; நானும் கப்பலில் அழுந்தினேன்; ஆயினும், மீண்டும் மேல் எழுந்தபோது உடைந்த கப்பலின் மரத்துண்டு ஒன்றை ஒரு கையாற் பற்றிக்கொண்டு மற்றொரு கையால் நீந்திச் சென்றேன். காற்றானது மெல்ல என்னை அடித்துக்கொண்டு போய் ஒரு தீவினருகிற் சேர்த்தது. அத்தீவின் கரை செங்குத்தாக இருந்தது. அப்படி இருந்தும், நான் மிகவும் வருந்தி, அத்தீவின் கரையில் ஏறினேன். பிறகு அயர்ச்சி நீங்கும் பொருட்டுச் சிறிது நேரம் புல்லின்மேல் உட்கார்ந்திருந்து, அத்தீவுக்குள்ளே சிறிது தூரம் சென்றேன். அங்குப் பல சோலைகள் இருந்தன. அச்சோலைகளில் உள்ள மரங்களில் பல வகையான இனிய பழங்கள் இருந்தன. அச்சோலைகளில் இனிய நீரோடைகளும் பல இருந்தன. அங்கு மென்மையான குளிர்ந்த காற்றும் வீசிக்கொண்டிருந்தது. நான் அம்மரங்களில்உள்ள கனிகளைப் பறித்துத் தின்று, நீரோடையிலுள்ள நீரைப் பருகினேன். அன்றிரவு புல்லுள்ள தரையிற் படுத்துக்கொண்டேன்; ஆனால், மரங்கள் அடர்ந்து பெருங்காடாய் இருந்த அந்த இடத்தில் தன்னந்தனியனாய் இருக்கும் எனக்குத் தூக்கம் வருமோ? அச்சமிகுதியினால் அன்றிரவெல்லாம் தூங்காமலே இருந்தேன். பொழுது விடிந்தவுடன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, பின்பு நல்ல கனிகள் சிலவற்றைப் பறித்துத் தின்று, அந்தத் தீவுக்குள் பின்னுஞ் சிறிது தூரஞ் சென்றேன். அங்கு ஒரு நீரோடையின் கரை

யிலே மிகவும் இளைப்புற்றவனாகிய ஒரு கிழவன் உட்காந்திருக்கக் கண்டு, 'அவன் நம்மைப்போலக் கப்பல் உடைந்ததனால் இங்கு வந்து சேர்ந்தவன் போலும்!' என்று எண்ணி, அவன் அருகிற் சென்று வந்தனஞ் செய்தேன். அவன் பதில் வந்தனஞ் செய்யாமல், சற்றுத் தலையை மாத்திரம் அசைத்தான். நான் அவனைப் பார்த்து, 'நீ இங்கு என்ன செய்கின்றாய் ?' என்று கேட்டேன். அவன் அதற்குப் பதில் ஒன்றுஞ் சொல்லாமல், தன்னை நான் என் தோளில் ஏற்றிக் கொள்ள வேண்டும் எனவும், தான் அங்குள்ள மரங்களில் உள்ள கனிகளைப் பறித்துத் தின்ன வேண்டும் எனவும் சில குறிப்புகளைக் காட்டினான். நான், 'இவன் தன் பசிப்பிணியைப் போக்கிக்கொள்ளுதற்கு நம்முடைய உதவியை விரும்புகின்றான்,' என்று எண்ணி, அவனை என் தோளின்மீது ஏற்றிக்கொண்டு, கனிகள் நிரம்பிய மரங்களின் பக்கமாகச் சென்றேன். அவன் தனக்கு வேண்டிய அளவு கனிகளைப் பறித்துத் தின்றான். பிறகு நான், 'ஐயா, பெரியவரே, இனி நீர் இறங்கலாமே!' என்றேன். அக்கொடியவன் அவ்வாறு சொல்லிய சொல்லைக் கேட்டவுடனே தன் இரண்டு கால்களினாலும் என் கழுத்தைக் கெட்டியாக இறுக்கினான். அதனாலே நான்பேச்சு மூச்சற்றுச் சோர்ந்து பூமியிலே விழுந்தேன். அதனைக் கண்டு அக்கொடிய கிழவன் தன் கால்களைச் சிறிது தளர்த்தினான். சிறிது நேரஞ் சென்றபின் எனக்குச் சுவாசம் வந்தது. பின் சிறிது நேரஞ் சென்று எனக்கு நன்றாய்த் தெளிவு உண்டாயிற்று. அக்கிழவன் தன் கால்களால் உதைத்து

என்னை எழுப்பினன். எழுந்த பிறகு பழங்கள் நிரம்பி உள்ள மரங்களின் பக்கமாகப் போகும்படி எனக்குக் குறிப்புக் காட்டினன். நானும் அப்படியே சென்றேன். அவன் சில கனிகளைப் பறித்துத் தின்றான். நானும் பசி பொறுக்காமல் சில பழங்களைப் பறித்துத் தின்றேன். இவ்வாறே அக்கொடுமை மிக்க கிழவன் பகல் முழுதும் தன்னைச் சுமந்து திரியும்படி செய்து என்னை வருத்தினன்.

"இரவானபோது நான் மிக்க சோர்வடைந்து தரையிற் படுத்துக்கொண்டேன். அப்பொழுதும் அப்பாவியாகிய கிழவன் என் கழுத்தைத் தன் கால்களால் சுற்றிப் பிடித்துக்கொண்டு, பூமியில் விழுந்து கிடந்தான். பொழுது விடிந்தவுடன் என்னைத் தன் கால்களால்உதைத்து எழுப்பினன். நான் எழுந்து அவனைச் சுமந்துகொண்டு மரங்களின் பக்கம் போனேன். இப்படியே பல நாள் செய்து வந்தான். நண்பர்களே, அப்பொழுது நான் எப்படிப்பட்ட வருத்தத்தை அடைந்திருப்பேன் என்பதை நீங்களே எண்ணி அறிந்துகொள்ளலாம்.

"இப்படி ஒரு நாள் அக்கிழவனைச்சுமந்துசெல்கையில் ஓரிடத்தில் மரங்களுக்கிடையில் சில தேங்காய்க் குடுக்கைகள் கிடந்தன. அவற்றுள், பெரிதான ஒரு குடுக்கையை எடுத்து, அங்கு விஸ்தாரமாயுள்ள கொடி முந்திரிப்பழங்களின் சாற்றை அதில் நிரம்பப் பிழிந்து, அதை நன்றாக மூடித் தரையில் பாங்கான ஓரிடத்திற் புதைத்து வைத்தேன்; சில தினங்கள் சென்ற பிறகு அக்குடுக்கையை எடுத்து, அதில் உள்ள சாற்றிற்

சிறிது பருகினேன். அஃது இனிப்பான சிறந்த ஓயின் சாராயமாய் இருந்ததனால், என்னுடைய வருத்தங்களை எல்லாம் போக்கி, எனக்கு மிக்க களிப்பையும் வலிவையும் கொடுத்தது. ஆகையால், நான் உல்லாசமாக ஓடிப் பாடி ஆடினேன். அக்கொடிய கிழவன் எனக்கு அப்படி உற்சாகம் உண்டானதற்குக் காரணம் நான் அச்சாற்றை அருந்தியதே என்பதை அறிந்துகொண்டு, தனக்கும் அதிற் சிறிது கொடுக்கும்படி சைகை செய்தான். நான் அக்குடுக்கையை அவன் கையிற் கொடுத்தேன். அவன் அதிலிருந்த சாற்றைச் சிறிதும் மிச்சமாக வைக்காமற் பருகிவிட்டான். அதனால், மயக்கந் தலைக்கேற, அவன் உல்லாசமாய்க் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு பாடலானான். நான், 'இதுவே இவனிடமிருந்து தப்புதற்குரிய சமயம்,' என்றெண்ணி, அக்கிழவனை என் தோளினின்று கீழே தள்ளினேன். அவன் தரையில் விழுந்து அசையாமற் கிடந்தான். உடனே நான் ஒரு பெரும்பாறையைக் கொண்டுவந்து அவன் தலை நன்றாக நசுங்கும்படி தலையிற் போட்டேன். அவன் தலை நசுங்கி உயிர் துறந்தான். பிறகு, 'கடவுளே, இக்கொடிய கிழவன் உயிர் நற்கதி அடையும்படி அருள்க,' என்று கடவுளை வணங்கி வேண்டிக்கொண்டு, கடற்கரைக்குச் சென்று, ஏதேனுங் கப்பல் வருகின்றதா எனப் பார்த்தேன். அப்போது ஒரு கப்பல் நங்கூரம் போடப்பட்டு, அத்தீவிற்குச் சிறிது தூரத்திலிருப்பதைக் கண்டேன். அக்கப்பலின் வேலையாட்களிற் சிலர் தீவின் கரை ஓரத்தில் நீர்மொண்டுகொண்டும், சிலர் உல்லாசமாய் உலவிக்

கொண்டிருக்கப் பார்த்தேன். அவர்களைக் கண்ட போது எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே நான் அவர்களிடஞ் சென்று, அவர்களுக்கு வந்தனம்புரிந்தேன். அவர்களும் எனக்குப்பதில் வந்தனம் புரிந்து, 'நீர் இங்கு எப்படி வந்தீர்?' என்று கேட்டார்கள். நான் அத்தீவுக்கு வந்த வரலாற்றையும் அப்பாவிக் கிழவனால் அடைந்ததுன்பங்களையும்அவர்களுக்குக் கூறினேன். அவர்கள் வியப்படைந்து, 'ஐயா, அக்கொடிய கிழவனிடத்திலிருந்து நீர் தப்பி வந்தது மிகவும் வியப்பான செயலே. இதுவரையிலும் அவன் கையிலகப்பட்டபின் தப்பினவர் எவருமிலர். நீர்தான் தப்பி வந்தீர். அவன் கொன்று தின்ற மனிதர் மிகப் பலர். அவனை அறிந்தவர்கள் அவனைக் 'கடற்கிழவன்' என்று சொல்லுவார்கள். கப்பலினின்று இத்தீவில் இறங்குகின்றவர்கள் கூட்டம் கூட்டமாகவே இறங்குவார்கள். தனியாக எவரும் இறங்கார். அவன் கையினின்று உம்மைக் காத்தருளிய கடவுளின் திருவருள் வாழ்க,' என்று கூறித் தங்களோடு அக்கப்பலில் என்னை ஏற்றிக்கொண்டார்கள். அக்கப்பல்தலைவன் என் வரலாற்றைக் கேட்டு, என்னிடம் இரக்கங்கொண்டு, என்னைத் தன் நண்பனாகக் கொண்டான்.

"பிறகு அக்கப்பல் புறப்பட்டுச் சென்று, ஒரு பெரிய பட்டினத்தை அடைந்தது. அப்பட்டினத்திலே வீடுகள் நல்ல கற்களாற் கட்டப்பட்டிருந்தன. மாலுமித் தலைவன் என்னை நோக்கி, 'நண்பரே, இப்பட்டினத்திற் சிலர் இறங்கி, இதற்குச் சிறிது தூரத்தில் தென்னைமரங்கள் மிகுதியாயுள்ள காட்டிற்குச் சென்று, ஒருபாயத்

தைச் செய்து தேங்காய்களைப் பொறுக்கிப் பைகளில் நிரப்பிக்கொண்டு வருவார்கள். நீரும் அப்படியே செய்து தேங்காய்களைப் பொறுக்கி இந்தப் பையில் நிரப்பிக்கொண்டு வருக,' என்று கூறி, ஒரு பெரிய பையையும், சில தின்பண்டங்களையும் கொடுத்தான். பின்பு அந்நற்குண மிக்க மாலுமி அங்கு இறங்குகின்ற வர்களைப் பார்த்து, 'இவரையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்,' என்று சொன்னான். அவர்களும் அவ்வாறே என்னைத் தங்களோடு அழைத்துச் சென்றார்கள்.

"நாங்கள் அப்பட்டினத்தைக் கடந்து மாலுமி சொன்ன அக்காட்டை அடைந்தோம். அக்காட்டில் தென்னை மரங்களும், புன்னை மரங்களும் இருந்தன. ஆனால், புன்னைமரங்களைவிடத் தென்னைமரங்கள் அதிகமாய் இருந்தன. அம்மரங்கள் மிகவும் உயரமாகவும், ஒருவரும் ஏறமுடியாதபடி வழவழப்பாகவும் இருந்தன. நாங்கள் அக்காட்டுக்குள் போனபோது அக்காட்டில் பல வகையான வாலில்லாக் குரங்குகள் மிகுதியாயிருக்கக் கண்டோம். அக்குரங்குகள் எங்களைப் பார்த்தவுடன் மிகவும் வேகமாய் ஓடித் தென்னை மரங்களின் மீது ஏறிக்கொண்டன. என்னுடன் வந்தவர்கள் அக்குரங்குகளின்மேல் கற்களை எடுத்து வீசினார்கள். நானும் அப்படியே செய்தேன். அக்குரங்குகள் தங்கள் பகையைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அம்மரங்களில் உள்ள தேங்காய்களைப் பறித்துக் குதித்துக் குதித்து எங்கள் மேலே எறிந்தன. அவைகள் அவ்வாறு கைசலிக்கும்வரையிலும் எறிந்துகொண்டிருந்தன.

அவைகள் அவ்வாறு எறிந்துகொண்டிருக்கையில் நாங்கள் அத்தேங்காய்களைப் பொறுக்கி எங்கள் பைகளை நிரப்பிக்கொண்டோம். 'குரங்கெறி விளங்கனி,' என்னும் இவ்வுபாயத்தினலல்லாமல் வேறுவகையினுல் அவ்வளவு காய்களைச் சேகரித்தல் ஒருபோதும் முடியாது.

"பிறகு நாங்கள் அப்பைகளுடன் அக்காட்டைக் கடந்து வந்து கப்பலை அடைந்தோம். கப்பலின் தலைவன் அத்தேங்காய்களைப் பெற்றுக்கொண்டு, அவைகளுக்குரிய விலையை எங்களுக்குக் கொடுத்தான். அப்பணம் எங்களுக்குப் போதியதாக இருந்தது. பிறகு அம்மாலுமி, என்னைப் பார்த்து, 'நண்பரே, வேண்டிய அளவு தேங்காய்கள் சேகரிக்கும் வரையிலும் இக்கப்பல் இங்குத் தங்கி இருக்கும். அதுவரையிலும் நீர் நாள்தோறும் இப்படியே செய்து உம்முடைய ஊருக்குப் போதற்கு வேண்டிய அளவு பணத்தைச் சேர்த்துக்கொள்ளும்,' என்று கூறினுன். நான் கப்பல்தலைவனுடைய அன்பான சொல்லைக் கேட்டு மகிழ்ந்து, அவனுக்கு அன்போடு வந்தனம் புரிந்து, அவ்வாறே செய்து வேண்டிய அளவு பணத்தைச் சேர்த்துக்கொண்டேன். பிறகு நானும் வேண்டிய அளவு தேங்காய்களைச் சேகரித்துக்கொண்டேன். அக்கப்பல் வேறிடத்திற் செல்வதாய் இருந்தபடியினுல், 'மற்ருெரு கப்பல் வந்தால் அதில் ஏறிக்கொண்டு செல்லலாம். வேறு கப்பல் வராவிட்டால், இக்கப்பலிலேயே ஏறிச் செல்வோம்,' என்று எண்ணிக்கொண்டிருக்கையில் வேருெரு கப்பல் அங்கு வந்து தங்கியது. நான் முன் வந்த கப்பலின் மாலுமியினிடம் சென்று என்னுடைய

மனமார்ந்த வந்தனத்தை அவனுக்குச் செலுத்தி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, பிறகு மற்ற நண்பர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு, புதிதாக வந்த கப்பலின் தலைவனிடஞ் சென்று பேசி, என் சரக்குகளுடன் அக்கப்பலில் ஏறிக்கொண்டேன்.

"அக்கப்பல் உடனே புறப்பட்டு, அகிற்கட்டை சந்தனம் முதலிய சுகந்தப் பொருள்களும், மிளகும் மிகுதியாகக் கிடைக்கும் கோமாராத் தீவுக்குச் சென்றது. அத்தீவில் நான் தேங்காய்களை அகிற்கட்டை, சந்தனம், மிளகு முதலிய பொருள்களுக்கு மாற்றிக் கொண்டேன். பிறகு அக்கப்பல் புறப்பட்டு, முத்துக் குளித்தெடுக்கும் இடத்திற்குச் சென்றது. அங்கு நான் முழுக்காளிகளைக் கூலிக்கு வைத்துக்கொண்டு, அவர்களை முழுகச் செய்தேன். அவர்கள் கடலில் முழுகி மிகவும் பெரிய சிறந்த முத்துகளை எடுத்துக் கொடுத்தார்கள். பிறகு கப்பல் பால்சோராப் பட்டினத்தை வந்தடைந்தது. நான் அக்கப்பலை விட்டு என் சரக்குகளுடன் இறங்கிப் பாக்தாத்தை அடைந்துபல தருமங்களைச் செய்து என் சுற்றத்தினரோடு இன்பமாய் வாழலானேன்."

சிந்துபாத்து இவ்வாறு கூறி, நூறு சவரன்களுள்ள பையை இந்துபாத்துக்களித்தான். இந்துபாத்து முதலியவர்கள் சிந்துபாத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு, தங்கள் இருப்பிடம் அடைந்தார்கள்.

ஆறாங் கப்பல் யாத்திரை

மறு நாள் சிந்துபாத்தின் நண்பர்கள் வழக்கம் போலச் சிந்துபாத்தின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அனைவரும் உண்டபின் சிந்துபாத்து அவர்களைப் பார்த்து, 'நண்பர்களே, நான் ஆறும் முறை கப்பல் யாத்திரை செய்த வரலாற்றைக் கூறுகின்றேன்; கேளுங்கள்,' என்று பின் வருமாறு கூறலானான்:

"நண்பர்களே, நான் ஐந்தாமுறை கப்பல்யாத்திரை செய்துவந்தபிறகு ஓராண்டு என் மனைவிமுதலியசுற்றத்தினரோடு சுகமாக வாழ்ந்து வந்தேன். பிறகு எனக்கு மீண்டும் கப்பல் யாத்திரை செய்வதில் விருப்பமுண்டாயிற்று. அப்போது என் மனத்தில், 'நாம் முன் செய்த கப்பல்யாத்திரைகளில் பலதுன்பங்களை அடைந்தோம். அவற்றைப்போல இப்பொழுதும் துன்பமுண்டானால் என்ன செய்வது!' என்னும் எண்ணமுண்டாயிற்று. பிறகு, 'நம்முடைய கப்பல் யாத்திரைகளில் வந்தவர்களிற் பலர் இறந்துபோக நாம் மாத்திரம் இறக்காமல் ஆபத்துகளினின்று தப்பி வரவில்லையா! நம்முடைய உயிர் போகவேண்டிய காலம் வந்தால் நாம் எவ்வளவு சிறந்த பாதுகாப்புடைய இடத்தில் இருந்தாலும் போய்விடும். அக்காலம் வாராத வரையினும் எவ்வளவு ஆபத்துகள் வந்தாலும் அவற்றினின்றும் உயிர் தப்பி வருதல் நிச்சயம். இக்கருத்தை, 'ஆவாரை யாரே அழிப்ப ரதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பவர்?' என அறிவிற்சிறந்தோருங் கூறியிருக்கின்றனர். ஆகையால், கடல் யாத்திரையில் நேரிடும் துன்பங்களுக்கஞ்சி

நாம் வீணுகக் காலத்தைக் கழிக்கக் கூடாது,' என்று எனக்குள் நானே அதற்குச் சமாதானம்கூறிக்கொண்டு கப்பல் யாத்திரை செய்ய நிச்சயித்துக்கொண்டேன்; பிறகு அதற்கு வேண்டிய சரக்குகளைச் சேகரிக்கத் தொடங்கினேன். அதனை அறிந்த என் மனைவிமுதலியவர்கள் என்னிடம் வந்து, 'இனித் தாங்கள் கப்பல் யாத்திரை செய்தல் வேண்டா. இப்பொழுது நமக்கிருக்குஞ் செல்வம் அரசர்களுக்கும்இராதே. இன்னும் எதற்காகக் கப்பல் யாத்திரை செய்து பொருள் தேடவேண்டும்?' என்று பலவற்றைக் கூறி, என் யாத்திரையைத் தடுத்தார்கள். நான் அவர்கள் கருத்துக்கிணங்காமல், வேண்டிய சரக்குகளைச் சேர்த்துக்கொண்டு, புறப்பட்டுப் பாரிசு தேசத்துக் குடாக்கடலின் வழியாகப் போகாமல் அத்தேசத்துத் தீவுகளின் வழியாகச் சென்று ஒருதுறைமுகத்தை அடைந்தேன். அப்போது அங்கொரு கப்பல் இருக்கக் கண்டேன். அக்கப்பலில் நானும் மற்றும் பல வர்த்தகர்களும் எங்கள் சரக்குகளுடன் ஏறிக்கொண்டோம். அக்கப்பல்தலைவன் அக்கப்பல் நெடுந்தூரஞ் செல்லுமென்று நாங்கள் கப்பலில் ஏறுதற்கு முன்னரே கூறினன். நானும் மற்ற வணிகர்களும் அதற்குச் சம்மதித்துத்தான் அதில் ஏறிக்கொண்டோம்.

"அக்கப்பல் புறப்பட்டுச் செல்கையில் எப்படியோ வழி தப்பிப் போயிற்று. நாங்கள் இருக்கும் இடம் இதுவென்றும், இனிச் செல்லும் வழி இதுவென்றும் தெரியாமல் யாவரும் திகைத்தோம். எங்கள் மனத்தின் மகிழ்ச்சி முற்றும் அழிந்து விட்டது. நாங்கள் அனைவ

ரும் அச்சமிகுந்து வருந்தினோம். அப்போது அக் கப்பல்தலைவன் தன் தாடியையும் தலைமயிரையும் பிய்த் தெறிந்துகொண்டு, கோவென்றலறினான். அதைக் கேட்டவுடன் எங்கள் அச்சம் அளவுக்கடங்காமல் அதிகரித்தது. உடனே நாங்கள் அவனிடம் ஓடி, அவனை நோக்கி, 'நண்பரே, கப்பல் வழி தப்பியதைத் தவிர வேறொன்றும் நேர்ந்துவிடவில்லையே! இதற்காக நீரேன் இப்படி வருந்துகின்றீர்?' என்று கேட்டோம். அக் கப்பல்தலைவன் எங்களை நோக்கி, 'நண்பர்களே, இப் போதுநாம்இருக்கும்இடம், கடலிலுள்ள அபாயமான இடங்களுக்குள் முதன்மையாகிய இடமாகும். இங்கு நீரோட்டம் மிக விரைவில் உண்டாகும். ஒரு நொடிப் பொழுதில் நம்மை எல்லாம் இழுத்துக்கொண்டுவிடப் போகிறது. ஆகையால், நம்மை இந்த ஆபத்தினின்றுங் காக்கும்படி கடவுளை வேண்டிக்கொள்ளுங்கள். கடவுள் நம்மிடம் இரக்கங்கொள்ளாவிடில், நாம் எல்லோரும் இறப்பது நிச்சயம்,' என்று கூறிக் கப்பற் பாய்களை மாற்றும்படி கப்பல் ஆட்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறுசெய்துமுடிப்பதற்குள் நீரோட்டம் உண்டாகிக் கப்பற்கயிறுகளை எல்லாம் துண்டுதுண்டாக அறுத்துக் கப்பலை அடித்துக்கொண்டுபோய் ஏறக் கூடாத ஒரு மலையினது அடிவாரத்திற் சேர்த்தது. கப்பல் அம்மலையில் மோதிக்கொண்டு துண்டுதுண்டாய் உடைந்து போய்விட்டது. ஆயினும், நாங்கள் எங்கள் உயிரையும், தின்பண்டங்களையும், நல்ல சரக்குகளையும் காப்பாற்றிக்கொண்டோம்.

"அப்போது கப்பலின் தலைவன் எங்களை நோக்கி, 'நண்பர்களே, கடவுளானவர் தாம் விரும்பியதைச் செய்துவிட்டார். நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழியைத் தோண்டிக்கொள்ளுவோம்; உலகத்தாரை நெடுநாள் சுகமாக வாழும்படி வாழ்த்துவோம். ஏனெனில், நாம் உயிர் விடுவதற்கு ஏதுவான இடத்திற்கு வந்துவிட்டோம். இங்குக் கப்பல் உடைந்தவர்களில் ஒருவரும் மீண்டும் தங்கள் தேசத்திற்குத் திரும்பிச் சென்றதில்லை. இஃதுண்மை,' என்று சொன்னான். அதைக் கேட்டு நாங்கள் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. எங்களுக்கு நேர்ந்த ஆபத்தை எண்ணி ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு ஓவென்றலறினோம்.

"இவ்வாறு நாங்கள் புலம்பிக்கொண்டிருந்த மலையானது ஒரு தீவினுடைய கரையாகும். அங்கு எல்லாப் பக்கங்களிலும் மனிதர்களுடைய எலும்புகள் காணப்பட்டன. அவற்றைப் பார்த்தபடியால் எங்கள் அச்சம் மேன்மேலும் வளர்ந்து பெருகியது. அங்குக் கண்ட எலும்புகளின் மிகுதியால் பல மனிதர்கள் இறந்துபோயிருக்கின்றார்கள் என்று நாங்கள் தீர்மானித்துக் கொண்டோம்.

"அன்றியும், அவ்விடத்திலே நாங்கள் கண்ட ஒதுக்கப்பட்ட சரக்குகளையும், பொன், மணி முதலிய பொருள்களையும்பற்றிச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். நாங்கள் கண்ட மற்றோர் அதிசயம் யாதென்றால், அம்மலையின் கற்களைக் காணுந்தோறும் எங்களுக்குத் துக்கம் பெருகியதேயன்றி, மகிழ்ச்சி சிறிதும் உண்டாகவில்லை. 'கடவுள் எங்களைக் கடலில்

ஆழ்த்திவிட்டிருந்தால் எங்கள் துக்கம் அப்போதே ஒழிந்து போயிருக்குமே! ஏன் இப்படி இவ்விடத்திலே கொண்டுவந்து சேர்த்து, எங்களைத் துயரக் கடலில் ஆழ்த்தி வருத்துகின்றார்!' என்று கூறி வருந்தினோம். ஏனெனில், அந்த மலையில் ஏறிச் செல்லுதற்கும் வழி கிடையாது; வேறிடத்திற் செல்லவும் மார்க்கங் கிடையாது.

"அங்கு நாங்கள் இவ்விதத் துன்பமான நிலையிலிருந்து எங்கள் இறப்பை எதிர் பார்த்தவர்களாய், எங்களிடம் இருந்த உணவை யாவரும் சமமாகப் பங்கிட்டுக்கொண்டு, ஒவ்வொருநாளும் சிறிதுசிறிது உண்டு கடவுளைத் தொழுது, கண் கலக்கத்துடன் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தோம். என்னுடன் இருந்தவர்கள் தக்க உணவின்மையாலும், மனத்தின் வேதனையினாலும் நோயுண்டாகி ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக இறந்துகொண்டே வந்தார்கள். இங்ஙனம் இறந்தவர்களை இருந்தவர்கள் புதைத்து வந்தார்கள். கடைசியாக இறந்தவனை நான் புதைத்தேன். நான் என்னிடம் இருந்த உணவை மிகவுஞ் சிக்கனமாக உண்டு வந்தேன். ஆயினும், நானும் இறப்பது நிச்சயம் என்றெண்ணி, எனக்கும் ஒரு குழி தோண்டிக்கொண்டேன். பின்பு, 'நாம் இறந்தால் நம்மைப் புதைப்பவர் யார்? நமக்காக நாம் குழி தோண்டிக்கொண்டது அறிவற்ற செயலே. நாம் இறந்தால் நம்முடைய உடல் காக்கை, கழுகு, நரி முதலியவற்றிற்கே உணவாம்,' என்றெண்ணினேன்.

"உடனே என் மனத்தில் துயரம் கடலெனப் பெருகியது. 'ஐயோ! நாம் நம்முடைய உறவினர் வற்புறுத்திக் கூறிய புத்திமதிகளையும் கேளாமல் வந்தோமே! நமக்குக் கடவுள் அளித்த பெரும்பொருளை வைத்துக் கொண்டு சுகமாக வாழ்தற்குரிய பேறு நமக்கில்லையே! நம்முடைய விதி இப்படி இருக்க நம்முடையகதி வேறு வகையிற் செல்லுமோ! ஆற்றில் விடப்பட்ட தெப்பம் ஆற்றின் நீரோட்டஞ் செல்லும் வழியிற் செல்லுமே அன்றி, அதற்கு மாறுகச் செல்லுமோ?' என்று எண்ணிக்கொண்டிருக்கையில், என் பார்வை ஒரு குகைக்குள் பாய்ந்துகொண்டிருக்கும் ஒரு பெரிய ஆற்றின் மேற் சென்றது.

"உடனே என் மனத்தில், 'நாம் இப்பொழுதுஎப்படியும் இறக்கத் துணிந்துகொண்டிருக்கின்றோம். இப்படி ஓடுகின்ற ஆறுனது ஏதேனும் தூரமானதாகிய ஓர் இடத்திலிருந்துதான் வருவதாயிருக்கும். நாம் தெப்பம் செய்து இவ்வாற்றில் விட்டு, அதில் ஏறிச் சென்றுல், அஃதொரு வேளை நம்மை மனித சஞ்சாரமுள்ள இடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தாலுஞ் சேர்க்கலாம். அப்படியல்லாமல், ஒருகால் அத்தெப்பத்தினைக் கவிழ்த்துவிட்டாலும் விடட்டும். அதனுல் மற்றவர்களைப்போல நாமும் இறந்துவிடப் போகிறோம். ஆனுல், மற்றவர் யாவரும் பட்டினியாலும் நோயினுலும் இறந்திருக்க, நாம் நீரில் மூழ்கி இறப்பதே அவர்களுக்கும் நமக்கும் உண்டாம் வேறுபாடாகும். இறக்கும் நிலையை அடைந்த சிலர், அபபொழுது கொடுத்த மருந்தால் உயிர் பிழைத்திருத்தலையுங் கண்டி

ருக்கின்றோமே! இப்படிச் செய்தோமானால் அஃதொரு வேளை நாம் எதிர் நோக்கி இருக்கும் சாவினின்று நம்மைத் தப்புவித்து நாம் மிக்க செல்வத்தோடு வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்படி செய்யினுஞ் செய்தல் கூடும். கடவுளின் சித்தம் யாருக்குத் தெரியும்!' என்று பல எண்ணங்கள் எழுந்தன.

"பிறகு நான், உடைந்து போன கப்பல்களின் மரப் பலகைகளைக் கொணர்ந்து அங்குக் கிடந்த பெரிய கயிறுகளால் ஒரு தெப்பத்தினை அழுத்தமும் திருத்தமுமாகக் கட்டி, அதனைத் தள்ளிக்கொண்டு செல்லுதற்கு வேண்டிய இரண்டு கழிகளையுஞ் சித்தப்படுத்திக் கொண்டு, அத்தெப்பத்தை அவ்வாற்றின் ஓரத்தில் விட்டு, அங்கு இருந்த பச்சை, வைடூரியம் முதலிய நவமணிகளையும் பல மூட்டைகளாகக் கட்டி அவற்றுடன் பல உயர்ந்த ஆடைகளையும் சேர்த்துவைத்து அத்தெப்பத்திற்குப்போதுமான சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு அதில் ஏறிக் கடவுளை வாழ்த்தி வணங்கித் தண்டுகளால் அதனை அவ்வாற்றிற் செலுத்தினேன்.

"அத்தெப்பம் அக்குகையின் அருகிற் சென்றது. அங்கு வெளிச்சம் என்பதே சிறிதுங் கிடையாது. நீரோட்டமானது தெப்பத்தை விரைவாகச் செலுத்தியது. அஃது எங்குச் செலுத்திக்கொண்டு போயிற்றோ! அஃது எனக்குத் தெரியாது. சில நாள் வரையினும் அப்பேரிருளிற் புதைந்து அத்தெப்பத்துடன் அவ்வாற்றில் மிதந்துகொண்டிருந்தேன். ஓரிடத்தில் அவ்வாறு குறுகி வளைந்த ஒரு சிறு வழியாகச் சென்றது. தெப்பம் அங்குச் சென்ற சமயத்தில் ஓரிடத்தில்

மோதிக்கொண்டது. அதனால், என் தலை உடைந்து போகத் தக்க ஆபத்து நேர்ந்தது. கடவுள் அருளால் நான் அவ்வாபத்தினின்று தப்பினேன். பிறகு நான் அவ்விதத் துன்பங்களுக்குட்படாதபடி தெப்பத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் செலுத்திக்கொண்டே போனேன். அவ்வாறு செலுத்திக்கொண்டு போகும் போது என்னிடம் இருந்த உணவிற் சிறிது அருந்தினேன். நான் மிகவுஞ் சிக்கனமாக என்னிடத்தில் இருந்த உணவை அருந்தி வந்தேன். ஆயினும், அவை சில நாட்களில் ஒழிந்து போயின. பிறகு நான் உணவு இல்லாது இருந்தும் எப்படியோ மெய்ம்மறந்து தூங்கி விட்டேன்.

"நான் எவ்வளவு நேரம் அவ்வாறு தூங்கினேனோ! அஃதெனக்குத் தெரியாது. நான் கண்களை விழித்துப் பார்த்தபோது என் தெப்பம் ஓரிடத்தில் அவ்வாற்றின் ஓரத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது. அவ்விடம் ஒரு பெரிய பட்டணமாக இருந்தது. சூரியகிரணங்களின் காய்ப்பு ஏறிய உடலினை உடையவர்களாகிய காப்பிரிகள் என்னைச் சூழ்ந்து நின்றிருந்தார்கள். அவ்விதக் காட்சியைக் கண்டவுடன் எனக்குண்டான வியப்பும் மகிழ்ச்சியும் அளவிட்டுச் சொல்லக் கூடியனவல்ல. உடனே நான் எழுந்து அவர்களுக்கு வந்தனம் புரிந்தேன். அவர்களும் எனக்குப் பதில் வந்தனஞ் செய்து, ஏதேதோ சொன்னார்கள். அவர்கள் மொழி எனக்குத் தெரியாமையால், அவர்கள் சொன்னது சிறிதும் எனக்கு விளங்கவில்லை. ஆயினும், எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால் நான், 'இது

கனவோ! உண்மையில் நனவுதானே!' என்று சந்தேகித்தேன். 'இது கனவன்று; நனவுதான்,' என்பதை நான் நன்றாய் அறிந்தவுடன் உரத்த சத்தத்தோடு அரபி மொழியிற் கடவுளைத் துதித்து அவர் அருளை வாழ்த்தினேன்; என் கண்களை மூடிக்கொண்டேன்.

"அக்காப்பிரிகளுள் அரபி மொழி தெரிந்தவன் ஒருவன் இருந்தான். அவன் என் அருகில் வந்து என்னை நோக்கி, 'சகோதரரே, நீர் எங்களைக் கண்டு அஞ்ச வேண்டா. நாங்கள் இவ்வூர் வாசிகள். கால்கள் வெட்டி எங்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் பொருட்டு நாங்கள் இங்கு வந்தபோது ஆற்றில் ஏதோ மிதந்துவரக் கண்டோம். நாங்கள் அஃதென்னவென்று உற்று நோக்கியபோது நீர் கண்களை மூடிக்கொண்டு தெப்பத்துடன் ஆற்றில் மிதந்து வருதலைப் பார்த்தோம். எங்களுள் ஒருவர் நீரில் இறங்கி நீந்திச் சென்று, அத் தெப்பத்தை மெல்ல இழுத்துக்கொண்டு வந்து இங்குக் கட்டினார். நீர் மெய்ம்மறந்து தூங்கிக்கொண்டிருந்ததனால், உம்மை எழுப்புதல் கூடாது என்றெண்ணி, உமக்கு விழிப்புண்டாகும் சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தோம். நீர் எப்படித் துணிந்து இம்மலையாற்றில் இறங்கினீர் ? எங்கிருந்து புறப்பட்டீர்? உம்முடைய வரலாறு யாது? கூறும்,' என்று கேட்டான்.

"நான் அவனை நோக்கி, 'அன்புள்ள சகோதரரே, எனக்கு மிக்க களைப்பு உண்டாயிருக்கின்றது; எனக்கேதேனும் தின்பண்டங் கொடுத்தருளும். ஏதேனும் தின்ற பிறகுதான் உமது கேள்விகளுக்கு என்னால் விடை தர முடியும்,' என்றேன். அதைக் கேட்டு அக்

காப்பிரி பல வகையான உணவுகளைக் கொணர்ந்து கொடுத்தார். நான் அவற்றை உண்டு பசி தீர்ந்த பிறகு என் வரலாற்றை விளக்கமாக அரபி மொழியிலே கூறினேன். அம்மொழி உணர்ந்த காப்பிரி அதனை மற்றவர்களுக்குங் கூறினான். அதனைக் கேட்டுஅவர்கள் எல்லாரும் மிக்க வியப்படைந்து, 'இவ்வரலாறு மிக விசித்திரமானதாயிருக்கின்றது. இதனை இவர் வாக்கினாலேயே நம்முடைய அரசருக்குச் சொல்விக்க வேண்டும்,' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அரபி மொழி உணர்ந்த காப்பிரி அதனை எனக்குத் தெரிவித்தான்.

"நானும் அதற்குடன்பட்டு, அவர்கள் தருவித்த குதிரைமீது ஏறிக்கொண்டு அவர்களுடன் சென்றேன். அவர்களுட் சிலர் எனக்கு வழி காட்டிக்கொண்டு முன்னே நடந்து சென்றார்கள். சிலர் என் மூட்டைகளையும், தெப்பத்தையும் எடுத்துக்கொண்டு எனக்குப் பின்னே நடந்து வந்தனர். அக்காப்பிரிகள் இவ்வாறு என்னை அழைத்துச் சென்று, தங்கள் அரசர்முன் விட்டார்கள்.

"நான் அவ்வரச சிங்காதனத்தின் அருகிற்சென்று வணங்கிப் பூமியை முத்தமிட்டேன். அம்மன்னர் மகிழ்ந்து என்னை அருகில் அழைத்துத் தம் பக்கத்தில் ஓராசனத்தில் உட்காரச் சொன்னார். நான் அப்படியே உட்கார்ந்தேன். பிறகு அவ்வரசர், 'உம் பெயர்என்ன?' என்றார். நான், 'என் பெயர் சிந்துபாத்து மாலுமி என்பது. ஆனால், நான் மாலுமியல்லேன். பல முறை நான் கப்பல் யாத்திரை செய்ததனால் எனக்கப்பெயர் உண்

டாயிற்று,' என, அரசர், 'உமது ஊர் யாது?' என்றார். நான், 'என் ஊர் பாக்தாத்து,' என, அரசர், 'நீர் இங்கு எவ்வாறு வந்தீர்?' என்று கேட்டார். நான் என் வரலாறு முழுமையுங் கூறினேன். அம்மன்னர் அதைக் கேட்டு மிக்க வியப்படைந்து, என் வரலாறு முழுதினையும் ஓர் ஏட்டிலே எழுதுவித்து, அதைத் தக்கதோர் இடத்தில் வைத்துக்கொண்டார்.

"அப்பொழுது என்னுடைய பொருள்களை எல்லாம் சில காப்பிரிகள் அங்குக்கொண்டு வந்து வைத்தார்கள். நான் அப்பொருள்களை எல்லாம் அவ்வரசருக்குக் காட்டினேன். அவ்வரசர் மிக்க விருப்பத்துடன் அவற்றைப் பார்த்தார். நான் அதைக் கண்டு அவ்வரசரை நோக்கி, 'வேந்தரே, நான் தங்களுக்குச் சொந்தமானவன். இப்பொருள்களும் தங்களுக்குச் சொந்தமானவைகளே. தாங்கள் இவற்றை ஏற்றருளும்,' என்றேன். அரசர் என்னை நோக்கி, 'அன்பரே, பிறர் பொருளை விரும்புதல் எவருக்கும் முறையாகாது. என்னை வந்தடைந்த உமக்கு நான் உதவி புரியாமல் உம்முடைய பொருளை எடுத்துக்கொள்வேனாகில், எனக்குப் பழியும் பாவமுமே உண்டாம். அற வழியில் நிற்பவர்களுக்கே கடவுள் அருள் கிடைக்கும். எவ்வளவுபெரும் பொருளைப் படைத்தவர்களும் முடிவில் இறப்பது திண்ணம் என்பதைச் சிறிதும் சிந்தியாமல் பொருளையே முதன்மையானது என்றெண்ணி, அதன் பொருட்டுப் பேயென அலைந்து திரிபவர் கடவுள் அருளைப் பெறார். அன்புடைய வணிகரே, நீர் வருந்தி ஈட்டிய பொருளை வைத்துக்கொண்டு ஏழைகளை ஆதரித்து, உம்முடைய

மனைவி மக்களுடன் இன்பமாக வாழ்வீராக,' என்று கூறினார். அவ்வரசர் மொழிகள் தேனினும், கற்கண்டினும், பாகினும் மிக இனியவாய்ச் செவிவழிப் புகுந்து என் மனத்தை இன்பக் கடலுள் ஆழ்த்திவிட்டன.

"நான், 'கடவுளே, இவ்வரசருடைய அருளும், அன்பும், செங்கோலும் நீடு வாழ்வனவாக; இவ்வேந்தர் நாட்டில் காலந் தவறாமல் மேகங்கள் மழை பொழியச்செய்க; எல்லாத் திசையினும் இம்மன்னர் புகழைப் பரப்பியருள்க,' என்று வணங்கி வேண்டினேன்.

"அவ்வரசர், 'அன்பரே, சிந்துபாத்தே, நீர் சில நாட்கள் இந்நாட்டில் தங்கியிருந்து பிறகு உமது ஊருக்குப்போவீராக,' என்று சிப்பணியாளர்களை அழைத்துச் சிறிதும் குறைவு நேராதபடி எனக்கு உபசாரங்களைச் செய்யும்படி கட்டளை இட்டார். நான் அரசர் உத்தரவு பெற்று, எனக்கு அரசரால் ஏற்படுத்தப்பட்ட இடத்தை அடைந்தேன். பின்பு, நாள்தோறும் அரசரைச் சென்று பார்ப்பதற்கு ஒருகாலத்தை ஏற்படுத்திக்கொண்டு மற்ற வேளைகளில் அவ்வூரைச் சுற்றிப் பார்த்து வந்தேன்.

"'அத்தீவுக்குச் 'சிரன் தீவு' என்பது பெயர். ஒரு கப்பல் மூன்றுநாள் பிரயாண தூரத்தில் வரினும் அத்தீவின் தலைநகராகிய அப்பட்டினத்துக் கடற்கரையில் நிற்பவர்களுக்குத் தெரியும். அங்குப் பல இடங்களில் நவமணிகளும், பஞ்ச உலோகங்களும் கிடைக்கும். அங்கு வேறு நாட்டில் இல்லாத பல சிறந்த மரங்கள் இருக்கின்றன. அவ்வூராற்றின் ஒரு புறத்தில் முத்துச் சலாபம் இருக்கின்றது. அங்குள்ள மலைகளின் சாரல்களில் வச்சிரக் கற்களும், மாணிக்கக் கற்களும் மிகுதியாகக்

கிடைக்கின்றன. இத்தகைய வளம் அமைந்த அத்தீவில் நான் சில நாட்கள் தங்கி இருந்து, பிறகு அவ்வரசரை அணுகி, 'அன்புள்ள அரசரே, நான் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பல மாதங்களாய்விட்டன. ஆதலின், தாங்கள் நான் ஊருக்குப் போக விடையளித்தருள வேண்டும்,' என்றேன். அவ்வரசர் அப்படியே விடை கொடுத்தார். நான் ஊருக்குப் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாஞ் செய்துகொண்டு, மறுபடியும் அவ்வரசரிடஞ் சென்று அதனைத் தெரிவித்தேன். அவ்வேந்தர், எனக்குச் சிறந்த பல வெகுமதிகளை அளித்துப் பிறகு நம் அரசருக்கு ஒரு கடிதமும், சிறந்த மணிகள், அணிகள், ஆடைகள் முதலியவற்றையும் கொடுத்து, 'அன்புள்ள சிந்துபாத்தே,இவற்றைத் தவறுமல் உம்முடைய அரசரிடஞ் சேர்த்துவிடுக,' என்றனர். 'அரசரே, அன்பிற்சிறந்த தங்களது கட்டளையை யார் மறுப்பர்? தங்களுடைய கட்டளையின்படியே யான் இவற்றை எங்கள் வேந்தர்பாற் சேர்த்துவிடுகின்றேன்,' என்று கூறி, அம்மன்னரிடம் விடை பெற்றுக்கொண்டு கப்பலில் ஏறிப்புறப்பட்டுச்சில தினங்களிற் பாக்தாத்தை அடைந்தேன்.

"பிறகு அரசர் அரண்மனையை அடைந்து, அரசருக்கு நான் வந்திருப்பதைத் தெரிவிக்கும்படி அங்குள்ள காவலர்களிடங் கூறினேன். அவர்களும் அவ்வாறே என்கருத்தை அரசருக்குணர்த்தி அரசரது கட்டளையைப் பெற்றுவந்து என்னை அரசரிடம் அனுப்பினார்கள். நான் அரசர் அருகிற் சென்று வணங்கித் தரையை முத்தமிட்டு நின்று, சிரன் தீவின் அரசர்

கொடுத்த பொருள்களையும், கடிதத்தையும் அவரிடங் கொடுத்தேன். அவர் அவற்றைப் பெற்றுக்கடிதத்தைப் பிரித்துப் படித்து மகிழ்ந்தார். ஆயினும், என்னைப் பார்த்து, 'அன்புள்ள வணிகரே, அவ்வரசருடைய சிறப்புகளையும், குணங்களையும் கூறும்,' என்றார்.

"அன்புள்ள வேந்தரே, அவ்வரசருடைய செல்வத்தை அளவிட்டுரைக்க எவராலுமாகாது. அவ்வரசர் திருவோலக்கத்துக்குச் செல்கையில் யானை அம்பாரி போல நவரத்தினங்களிழைக்கப்பட்ட சிங்காதனம் அமைந்த யானையின்மீதேறிச் செல்கின்றார். அச்சபையில் அரசருடன் அமர்ந்திருப்பவர்களாகிய மந்திரிகள் முதலியவர்கள் தத்தம் வாகனங்களில் ஏறிக்கொண்டு அவரைச் சூழ்ந்து செல்கின்றார்கள். ஒருவன் யானையின்மீதேறிப் பொன் ஈட்டியைக் கையில் வைத்துக்கொண்டு, அரசருக்கு முன் செல்கின்றான். மற்றொருவன் யானையின்மீது ஏறிப் பொற்றடியை வைத்துக்கொண்டு, அரசருக்குப் பின் செல்கின்றான். அப்பொற்றடியில் நீளமுள்ள மாணிக்கக் கல் பதிக்கப் பட்டிருக்கின்றது. அப்பொற்றடிக்காரனைப் பின் தொடர்ந்து முந்நூறு பேர் பொன்னுடை அணிந்து யானைகளின்மீது ஏறிச்செல்கின்றனர். அவ்வரசருக்கு முன்னே போகின்றவன், 'மிக்க வீரமுடையவரும், வெற்றியிற் சிறந்தவரும், அளவில் அடங்காத செல்வத்தையுடையவரும், இருபதினாயிரம் யானைப்படைகளை உடையவரும் ஆகிய சிரன் தீவின் அரசர் வருகின்றார்,' என்று அடிக்கடிக் கட்டியங் கூறுகின்றான். அவ்வேந்தருக்குப் பின்னே வருகின்ற பொற்றடிக்காரனும்

அப்படியே கூறிப் பிறகு, 'இவ்வித அரசரும் சாகவேண்டும்; சாகவேண்டும்,' என்று தொடர்ந்து கூறுகின்றான். முன்னே செல்லும் பொன்னீட்டிக்காரன் உடனே, 'அவ்வாறே முடிய வேண்டும்,' என்றும், 'என்றும் அழியாதவராகிய கடவுளை வாழ்த்தக் கடவோம்,' என்றும் கூறுகின்றான்.

"'அவ்வரசர் மிக்க நீதியும் அன்பும் அருளும்உடையவர். அத்தீவிலே நீதித்தலம் ஒன்றுகூட இல்லை; அஃது எதனால் என்றால், அந்நாட்டு மக்களுக்குப் பிறர் நீதி சொல்ல வேண்டுவதில்லை; அவர்கள் யாவரும் நீதியின் தன்மையுணர்ந்து அதன்படி நடந்து வருகின்றார்கள். ஆதலால், இஃதொன்றே அவ்வரசருடைய நீதியான ஆளுகையின் சிறப்பை விளக்குதற்குப் போதியதாகும்,' என்றேன்.

"நம்முடைய அரசரும் நான் கூறியவற்றை ஒன்றும் விடாமல்ஒருபுத்தகத்தில் எழுதித்தக்கதோர் இடத்தில் வைத்துக்கொண்டு, எனக்குப் பல சிறந்த வெகுமதிகளை அளித்தார். நான், நம் அரசரைவணங்கி விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்து, பல தருமங்களைப் புரிந்து, என் மனைவி மக்கள் சுற்றத்தார் நண்பர்கள் முதலியவர்களுடன் சுகமாக வாழ்ந்து வரலானேன்."

சிந்துபாத்து இவ்வாறு கூறி இந்துபாத்துக்குநூறு சவரன்கள் அடங்கிய பையைக் கொடுத்தான்.

இந்துபாத்து முதலியவர்கள் சிந்துபாத்தினிடம் விடை பெற்றுத் தங்கள் மனைக்குச் சென்றார்கள்.

கடைசிக் கப்பல் யாத்திரை

மறு நாள் இந்துபாத்து முதலியவர்கள் சிந்து பாத்து வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் யாவரும் சாப்பிட்ட பிறகு சிந்துபாத்து அவர்களை நோக்கித் தன்னுடைய கடைசிக் கப்பல் யாத்திரையாகிய ஏழாங் கப்பல் யாத்திரையைப் பற்றி அடியில் வருமாறு சொல்லலானான்:

"நண்பர்களே, நான் ஆறுவது முறை கப்பல் யாத்திரை செய்துவந்த பிறகு, 'இனிக் கப்பல் யாத்திரை செய்வதில்லை,' என முடிவு செய்துகொண்டு, மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர் முதலியவர்களுடன் இன்பமாக வாழ்ந்து வருகையில் ஒரு நாள் நான் பல விருந்தினர்களோடு உணவருந்திக்கொண்டிருந்தேன். அப்போது காவலாட்களில் ஒருவன் வந்து, 'ஐயா, நம்முடைய அரசரிடமிருந்து ஒருவர் தங்களைக் காண வந்திருக்கின்றனர்,' என்றான். அஃது எங்கள் சாப் பாட்டு வேலை முடியுஞ் சமயமாக இருந்தது. உடனே நான் என் சாப்பாட்டை முடித்துக்கொண்டு சென்று, அம்மனிதரைக் கண்டேன். அவர் என்னை நோக்கி, 'செல்வரே, தங்களை நம்முடைய அரசர் காண விரும்பு கின்றார்,' என்றனர். உடனே நான் என் உடைகளை உடுத்திக்கொண்டு அவருடன்சென்று அரசரை அணுகி வணங்கித் தரையை முத்தமிட்டு நின்றேன். அரசர் என்னைத் தமக்கருகில் ஓராதனத்தில் உட்காருவித்து, என்னை நோக்கி, 'அன்புள்ள வணிகரே, உம்மை நான் எனக்கு மிகவும் வேண்டியவர்களில் ஒருவராகக்கொண்

டுளேன். சிரன் தீவின் அரசர் நமக்குச் செய்த மரியாதைக்குப் பதில் நாமுஞ் செய்ய வேண்டுவது இன்றி அமையாத செயலல்லவா? ஆகையால், நாம் ஒரு கடிதத்தையும், சில மணிகள், அணிகள், ஆடைகள் முதலியவற்றையும் உம்மிடம் தருகின்றோம். நீர் அவற்றைக் கொண்டு சென்று அவ்வரசரிடஞ் சேர்த்துவருவீராக; இதற்கு நீரே ஏற்றவராவீர்,' என்றனர்.

"அச்சொற்கள் எனக்கு என் தலையிற் பேரிடி விழுந்தாற்போல இருந்தன; எனக்கு மிக்க மனக்கவலையை உண்டாக்கின. என் முகம் வாடியது. என் முக வாட்டத்தை அரசர் அறிந்து, 'வணிகரே, என் சொற்களைக் கேட்டவுடன் உமக்கு இவ்வாறு முகவாட்டம் உண்டானதற்குக் காரணம் யாது?' என்று கேட்டனர். நான் செய்த கப்பல் யாத்திரையில் அடைந்த துன்பங்களை எல்லாங் கூறினேன். அரசர் என்னைநோக்கி, 'வணிகரே, அரச காரியங்கள் எவ்வளவு துன்பங்கள் தருவனவாயிருப்பினும் அஞ்சாமற்செய்து முடித்தற்குரியனவாம். அப்படிச் செய்யாவிடின் நாட்டுக்குத் துன்பம் விளையும். ஒரு நாட்டின் அரச காரியங்கள் அந்நாட்டின் அரசனை மாத்திரஞ் சேர்ந்தனவல்ல; அந்நாட்டின் குடிகள் முதலியவர்களையுஞ் சேர்ந்தனவாகும். சிரன் தீவின் அரசர் எல்லாவகையிலும் எமக்குச் சமான மேன்மையினை உடையவர் என்பதனை நாம் உம்மாலேதான் அறிந்தோம். அத்தன்மையை உடைய அவ்வரசருக்கு நாம் பதில் மரியாதை செய்யாவிடின், நம்பால் அவருக்கு அவமதிப்பும் உண்டாகும். அரசர்களுக்குச் சிறந்த அரசர்களுடைய நட்பு உண்டாதல் மிக்க

வன்மையாம். தானே கிடைக்கும் அவ்வேந்தர் நட்பை இழத்தல் தகுதியாகுமோ?' என்று கூறினர்.

"நான் உடனே எழுந்து அரசரை வணங்கி நின்று, 'எங்கள் அன்புக்குரிய அரசரே, எனக்கு எத்தகைய துன்பம் வருவதாயிருப்பினும், சிறிதும் அஞ்சாமல் தாங்கள் கொடுப்பனவற்றைக் கொண்டுசென்று சிரன் தீவின் அரசரிடஞ் சேர்த்துவிட்டு வருகின்றேன்,' என்று சொன்னேன்.

"அரசரால் கப்பல் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் நான் ஏறிக்கொண்டு புறப்பட்டுச் சென்று சிரன் தீவை அடைந்து, அத்தீவின் அரசர் சமுகமடைந்து, முன்போல மரியாதை செய்தேன். அவ்வரசர் என்னை வரவேற்றுப் பல உபசார மொழிகளைக் கூறினர். பிறகு நம் அரசர்கொடுத்த கடிதத்தையும் அணிகளையும்ஆடைகளையும் அவ்வரசரிடங் கொடுத்தேன். அந்த அரசர் அவற்றை ஏற்றுக்கொண்டு கடிதத்தைப் படித்து மகிழ்வடைந்தார். பிறகு நான் சில நாட்கள் அங்குத் தங்கி இருந்து அவ்வரசர் உத்தரவைப் பெற்றுக்கொண்டு புறப்படும்போது அவ்வரசர் எனக்குப் பல சிறந்த வெகுமானங்களை அளித்தார்.

"அவற்றைக்கொண்டு நான் கப்பலேறிப் புறப்பட்டேன். கப்பலானது புறப்பட்டு ஐந்து நாட்கள் ஆன பிறகு கள்ளக்கப்பற் கூட்டத்தார்கள் வந்து எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். எங்கள் கப்பலில் இருந்தவர்களில் சிலர் அவர்களை எதிர்த்தனர். அக்கள்ளர்கள் அவ்வாறு எதிர்த்தவர்களை எல்லாம் கொன்றுவிட்டார்கள்.

"நானும் மற்றுஞ் சிலரும் அவர்களை எதிர்க்காமல் பணிவாயிருந்தோம். அதனால் அக்கள்ளர்கள் எங்களைக் கொல்லாமல் சில நாட்கள் வைத்திருந்து, எங்கள் பொருள்களையும் ஆடைகளையும் பறித்துக்கொண்டு, எங்களுக்குக் கந்தல் துணிகளைக் கொடுத்துத் தூரமான ஒரு தேசத்தில் கொண்டுபோய் எங்களை விற்றுவிட்டார்கள். என்னை ஒருவணிகன் வாங்கினான். அவன் மிகநல்லவன். அவன் என்னை வருத்தாமல் தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று உணவளித்து, அரையில் உடுத்துக் கொள்ளுதற்குரிய உடையைக் கொடுத்தான்.

"சில நாட்கள் சென்றபின் அவ்வணிகன் என்னை, 'உனக்கு ஏதேனும் தொழில் தெரியுமா?' என்று கேட்டான். நான் என் வரலாற்றைக் கூறினேன். அவன் என்பால் மிக்க இரக்கமுற்று, 'உனக்கு அம்பு எய்யத் தெரியுமா?' என்று கேட்டான். 'ஐயா, நான் முதலில் கற்றவித்தை அதுதான். அதைநான் இதுவரையினும் மறக்கவில்லை,' என்றேன். அவ்வியாபாரி ஒரு வில்லையும், சில அம்புகளையும் என்னிடம் கொடுத்து, என்னை ஒரு யானையின்மீது தன்னோடு ஏற்றிக்கொண்டு, அப்பட்டினத்திற்குச் சிறிது தூரத்திலுள்ள காட்டிற்கு அழைத்துச் சென்று, இறங்குதற்குரிய ஓரிடத்தில் என்னை இறக்கி, 'அன்புள்ளவனே, அதோ இருக்கும் பெரியதாகிய மரத்தின்மீது ஏறிக்கொண்டு இவ்வழியாக வரும் யானையின்மீது அம்பை விடு. உன் அம்பு பட்டு யானை யாதேனும் விழுமானால் உடனே வந்து அதனை எனக்குத் தெரிவி,' என்று சொல்லி, எனக்குச் சிறிது உணவையுங் கொடுத்துவிட்டுச் சென்றான். நான்

அன்றிராமுழுதும் அம்மரத்தின்மீதே இருந்தேன். ஒரு யானையும் அங்கு வரவில்லை. மறு நாள் காலையில் பல யானைகள் அவ்வழியாக வந்தன. நான் அவற்றின்மேல் அம்புகளை எய்தேன். அவற்றுள் ஒரு யானை அம்பு பட்டுத் தரையில் விழுந்தது.

"உடனே நான் அம்மரத்தினின்று இறங்கிச் சென்று அந்த வெற்றியை என் தலைவனாகிய அவ்வணிக னுக்குக் கூறினேன். அவ்வணிகன் என் சாமர்த்தி யத்தை மெச்சி, எனக்கு நல்ல உணவளித்தான். பிறகு அவ்வணிகனும் நானும் சில ஆட்களுடன் காட்டிற்குச் சென்றோம். அவ்வணிகன் அந்த ஆட்களைக்கொண்டு ஒரு பள்ளம் வெட்டுவித்து, அதில் அந்த யானையைப் புதைத்துவிட்டான். பிறகு, அதன் தந்தங்களை எடுத்துக் கொள்ளும் பொருட்டே அவன் அப்படிச் செய்தான். நான் இரண்டு மாதம் வரையினும் இவ்வாறே நாள் தோறும் ஒவ்வொரு யானையை வீழ்த்திக்கொண்டிருந் தேன். பிறகு ஒரு நாள் அக்காட்டிலுள்ள யானைகளிற் பல ஒன்றாய்க் கூடி வந்து, நான் ஏறியுள்ள மரத்தைச் சூழ்ந்துகொண்டு, எனக்கு நேராகத் தம்முடைய துதிக் கைகளை நீட்டிப் பல மேகங்கள் ஒன்றாய்க் கூடி இடி இடிப்பதுபோலப் பிளிறின. அவைகள் அவ்வாறு செய்யவே என் மனத்தில் பயமிகுந்தது. நான் அச்ச மிகுதியினால் மரத்தோடு மரமாய்ச் சிறிதும் அசையா மல் இருந்தேன். என்கையில் இருந்த வில்லும் அம்பும் நழுவிக் கீழே விழுந்துவிட்டன. அப்போது அந்த யானைகளுக்குள் மிகவும் பெரிதாகிய ஒரு யானை நான் ஏறியிருந்த மரத்தை அடியோடு பெயர்த்துத் தரையிற்

S. BRAHMA

சாய்த்துவிட்டது. உடனே அந்த யானை என்னைத் துதிக்கையினால் தூக்கித் தன் பிடரியில் வைத்துக் கொண்டு, மற்ற யானைகளுடன் புறப்பட்டுச் சென்றது. அப்போது நான் பிணம்போல அதன்மீது கிடந்தேனே அல்லாமல், சிறிதும் உணர்வு உடையவனாக இருக்க வில்லை

"அவ்வாறு என்னைத் தூக்கிச்சென்ற யானை ஓரிடத்தில் இறக்கிவிட்டுத் தன் இனத்துடன் போய்விட்டது. நான் கண்விழித்துப் பார்த்தேன். அந்த யானை இறக்கிய இடம் ஒரு மலையாய் இருக்கக் கண்டேன். அம்மலையில் அளவில் அடங்காத தந்தங்கள் குவியல் குவியலாக இருந்தன. அவற்றைக் கண்டபோது, அந்த யானை, 'இம்மனிதன் தந்தங்களுக்காகத்தான் நம்மினத்தவர்களைக் கொல்லுகின்றான். தந்தங்கள் ஏராளமாக உள்ள இடத்தைக் காட்டிவிடின், பிறகு இவன் நம்மினத்தவர்களைக் கொல்லான்,' என்றெண்ணி எனக்கு அந்தத் தந்தங்கள் உள்ள இடத்தைக் காட்டுதற்காக அங்கு என்னை எடுத்துச் சென்றது எனத் தோற்றியது. உடனே நான் அந்த மலையின் நாற்புறத்தினுஞ் சுற்றிப் பார்த்தேன். அந்த யானைகள் அங்கு எங்கும் காணப் படவில்லை. ஆகையால், நான் இங்கு யாதொரு தடையுமில்லாமல் வந்து இந்தத் தந்தங்களை எடுத்துக்கொண்டு போக அந்த யானைகள் எனக்கு விடைதந்தன எனவும், இந்த இடம் அந்த யானைகள் தம்மில் இறக்கும் யானைகளைக் கொண்டுவந்து போடும் இடமாயிருக்கவேண்டும் எனவும் எண்ணிக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு

இரவும் பகலுமாய் நடந்து, அவ்வணிகனை அடைந்து, அவனிடம் நடந்த செய்திகளை எல்லாம் கூறினேன். அவன் அவற்றைக் கேட்டு வியப்படைந்து, 'அப்பா, இந்நாள்வரையினும் நீவராமையால் யானைகளின்கையில் அகப்பட்டு இறந்துவிட்டாய் என்றே எண்ணிக்கொண்டேன். கடவுள் உன்னைக் காத்துக் கொண்டு வந்து சேர்த்தார். கடவுள் அருள்வாழ்க,' என்று பல உபசார மொழிகளைக் கூறி எனக்கு உணவளித்தான்.

மறுநாள் நானும் அவ்வணிகனும் ஒரு யானையின் மீது ஏறிக்கொண்டு அம்மலைக்குச் சென்றோம். நான் சொன்னபடி அங்கு ஏராளமாகத் தந்தங்கள் இருப்பதை அவ்வணிகன் கண்டு வியப்படைந்து, என்னைத் தழுவிக்கொண்டான். பின்பு நானும் அவ்வணிகனும் நாங்கள் ஏறிச்சென்ற யானையின்மீது அது சுமக்கக் கூடிய அளவு தந்தங்களை ஏற்றி, நாங்களும் ஏறிக்கொண்டு, புறப்பட்டு வீடுவந்து சேர்ந்தோம். அவ்வணிகன் என்னை நோக்கி, 'அப்பா, இனி உன்னை அடிமையாக வைத்திருக்கமாட்டேன். உன்னால் நான் பெருஞ்செல்வத்தை அடையப் பெற்றேன். நான் மாத்திரமா? இந்த ஊரிலுள்ளவர் யாவரும் பெருஞ்செல்வத்தைப் பெற்றனர். இதுகாறும் நான் உன்னிடங் கூறாமல் மறைத்து வைத்திருந்த ஓர் உண்மையை இப்போது உனக்குக் கூறுகின்றேன். இதுகாறும் யானை வேட்டைக்குச் சென்ற அடிமைகளை எல்லாம் அங்குள்ள யானைகள் கொன்றுகொண்டே வந்தன. நாங்கள் பல உபாயங்களைச் செய்து பார்த்தோம். அந்த உபாயங்களில் ஒன்றும் பயன்படவில்லை. அப்படிப்பட்ட யானைகள்

உன்னைக் கொல்லாமல் விட்டது மாத்திரமல்லாமல் ஏராளமாகத் தந்தங்கள் உள்ள இடத்தையும் உனக்குக் காட்டிச் சென்றன ; ஆகையால் உன்னிடத்தில் கடவுள் பூரண அன்பு வைத்திருக்கின்ருர் என்பது நன்ருய் விளங்குகின்றது. உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாக வேண்டும் என்று கடவுளை வேண்டுகின்றேன். அப்பா, கடவுளறியக் கூறுகின்றேன். உன்னை அடிமைத் தனத்தினின்று விடுவிப்பதும் அன்றி உனக்குப் பெருந் திரளான பொருளையும் அளிக்கின்றேன்,' என்று சொன்ஞன்.

"நான் உத்தமஞன அவ்வணிகனை நோக்கி, 'ஐயா, எனக்கு வேருெரு பரிசும் வேண்டுவதில்லை. என்னை என் ஊருக்கு அனுப்புவதுதான் எனக்கு அளிக்க வேண்டிய பரிசாகும்,' என்று சொன்னேன். அந் நற்குண வணிகன், 'இப்பொழுது நீ கடலிற் செல்லுதலாகாது. கீழ்க்காற்றுத் திரும்பியவுடன் உன்னை நான் உன் ஊருக்கு அனுப்புகின்றேன்,' என்ருன். அவ்வூரிலுள்ள மற்றவர்களும் அம்மலையில் தந்தங்கள் இருப்பதை உணர்ந்து, அடிக்கடி சென்று அவற்றை எடுத்து வரலாஞர்கள். என்னை ஆதரித்த வணிகனும் நானும் பலமுறை அங்குச் சென்று ஏராளமான தந்தங் களைக் கொணர்ந்து வீட்டில் நிரப்பினேம். சில நாட் களின் பின் கீழ்க்காற்றுத் திரும்பியது. உடனே அத் தீவுக்குப் பல கப்பல்கள் வரக்கண்டு, என் தலைவஞன வணிகன் என்பொருட்டு ஒரு கப்பலைப் பேசி, அதிற் பாதியளவான தந்தங்களை நிரப்பி, அவ்வூரிலுள்ள சிறந்த பொருள்களை வாங்கி அளித்து, 'இவற்றை நீ

ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என வேண்டிப் பல உபசார மொழிகளைக் கூறி, என்னை அனுப்பினான். கப்பல் புறப்பட்டுச் சில நாட்கள் சென்ற பின் சிந்து தேசத்தை அடைந்தது. நான் என் தந்தங்கள் முதலியவற்றை அந்நாட்டிலே இறக்கித் தந்தங்களை எல்லாம் அந்நாட்டில் விற்றுவிட்டேன். பிறகு அந்நாட்டிலுள்ள சிறந்த பொருள்களை, என் நண்பர்களுக்கு அளித்தற் பொருட்டு வாங்கிக்கொண்டு, கடல் யாத்திரையில் உண்டாகும் இடுக்கண்களுக்கு அஞ்சிக் கடல் வழியாக வருதலை விட்டுத் தரை வழியாக வர எண்ணினேன். அப்பொழுது ஒரு வணிகக் கூட்டத்தினர் தங்கள் சரக்குகளை ஒட்டகம்முதலியவற்றின்மேல் ஏற்றிக்கொண்டு தரை வழியாக வியாபாரஞ் செய்யப் புறப்பட்டார்கள். நான் அவர்களுடன் புறப்பட்டுப் பாக்தாத்தை வந்தடைந்து, நம்முடைய அரசர் சமுகமடைந்து நடந்தவைகளை முற்றுங்கூறினேன். நம்மரசர் என் கடைசிக் கப்பல் யாத்திரையின் வரலாற்றைக் கேட்டு மிக்க வியப்படைந்து, ஒரு புத்தகத்தில் அந்த வரலாறு முழுமையும் எழுதித் தக்கதோரிடத்தில் வைத்துவிட்டு, என்னை உபசரித்து, எனக்குப் பல சன்மானங்களை அளித்து, விடை தந்து அனுப்பினார். நான் அவற்றைப் பெற்றுக்கொண்டு மனையை அடைந்து, பல தருமங்களைப் புரிந்து, மனைவி மக்கள் நண்பர்கள் முதலியவர்களுடன் கூடி, இன்பமாக வாழ்ந்துவரலானேன்.''

இந்துபாத்து, சிந்துபாத்தைப் பார்த்து, 'செல்வத்தின் சிறப்பும் நற்குணமேன்மையும் ஒன்றாய் அமையப்

பெற்ற அருமை நண்பரே, தாம் அடைந்த துன்பங்களை நோக்கினல் நான் அடைந்துவந்த துன்பங்கள் மலைக்கு முன்னும் அணுவைப் போன்றனவாகும்,' என்று கூறினன். சிந்துபாத்து, புன்னகை செய்து, நூறு சவரன்கள் அடங்கிய பையை இந்துபாத்துக்குக் கொடுத்து அவனை நோக்கி, 'நண்பரே, இனி உமது தொழிலை விடுத்து எனக்கினிய நண்பராய் இருந்து வருவீராக,' என்றான். இந்துபாத்தும் அவ்வாறே சிந்துபாத்தின் இனிய நண்பர்களுள்ளே ஒருவனுகி, இன்புற்று வாழலானன். சிந்துபாத்து, பல தருமங்களைச் செய்துகொண்டு, மனைவி மக்களுடனும், இந்துபாத்து முதலிய நண்பர்களுடனும் இன்புற்று வாழ்ந்து வந்தான்.

முற்றிற்று.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.